# செந்தமிழ்

தொகுதி : 96 திருவள்ளுவர் ஆண்டு 2033 செப்டம்பர் 2002 பகுதி : 9

திங்கள் இதழ்

ஆசிரியர் இரா. அழகுமலை எம்.ஏ.,எம்.ஃபில்.,

பதிப்பாசிரியர் இரா. சதாசிவம் எம்.ஏ.,எம்.ஃபில்.,

மதுரைத் தமிழ்ச்சங்கம், மதுரை - 1.

## தமிழ்ச் சங்க ஆட்சிக் குழு

| | |
|---|---|
| முகவை மன்னர் திரு.நா. குமரன் சேதுபதி | தலைவர் |
| திரு. எம்.பி.ஆர். மலையாண்டி என்ற அசோக் | துணைத்தலைவர் |
| திரு. இரா. அழகுமலை | செயலாளர் |
| திருமதி. இராணி இலட்சுமி நாச்சியார் | உறுப்பினர் |
| திரு. மா. சங்கர பாண்டியன் | உறுப்பினர் |
| திரு. டாக்டர். ந. சேதுராமன் | உறுப்பினர் |
| திரு. கே. கந்தசாமி | உறுப்பினர் |
| திரு. வெ. பழனிச்சாமித்தேவர் | உறுப்பினர் |
| திரு. வே. திருவரங்கராசன் | உறுப்பினர் |
| திரு. க.சி. அகமுடைநம்பி | உறுப்பினர் |
| திரு. ச. பரங்குன்றம் | உறுப்பினர் |
| திரு. இரா.குருசாமி | உறுப்பினர் |

## செந்தமிழ் ஆசிரியர் குழு

பேரறிஞர். நா. பாலுசாமி
பேரறிஞர். தமிழண்ணல்
பேரறிஞர். செ. கந்தசாமி
டாக்டர். ந. சேதுராமன்
பேரறிஞர். ம.ரா.போ. குருசாமி
பேரறிஞர். கதிர். மகாதேவன்
பேரறிஞர். அ.அ. மணவாளன்
பெரும் புலவர். இரா. இளங்குமரன்
பேரறிஞர். அ. தட்சிணாமூர்த்தி
பேரறிஞர். ந. வாசுகிராஜா
பேரறிஞர். ஈ.கி. இராமசாமி
பேரறிஞர். சே. அரிராமநாதன்
திரு. வே. திருவரங்கராசன்

# செந்தமிழ்

தொகுதி : 96 திருவள்ளுவர் ஆண்டு 2033 செப்டம்பர் 2002 பகுதி : 9

## திங்கள் இதழ்

| இதழ் கட்டணம் | உள்நாடு | வெளிநாடு |
|---|---|---|
| ஆண்டுக்கட்டணம் | ரூ. 60 | ரூ. 600 |
| வாணாள் கட்டணம் | ரூ. 500 | ரூ. 2000 |
| புரவலர் கட்டணம் | ரூ. 1000 | ரூ. 2000 |
| தனி இதழ் கட்டணம் | ரூ. 6 | |

ஆசிரியர் இரா. அழகுமலை எம்.ஏ.,எம்.ஃபில்.,

பதிப்பாசிரியர் இரா. சதாசிவம் எம்.ஏ.,எம்.ஃபில்.,

மதுரைத் தமிழ்ச்சங்கம், மதுரை - 1.

# பொருளடக்கம்

1. தமிழ்ப் பாண்டித்துரை வேந்தர் 305

2. தமிழும் இணையமும் 307
*பேராசிரியர் கதிர் மகாதேவன்*

3. தமிழில் தொழிற்கல்வி 319
*பேராசிரியர் இராம். சுந்தரம்*

4. மதுரையும் நாடகக்கலையும் 326
*பேராசிரியர் அ.சிவக்கண்ணன்*

5. திருவெம்பாவை - "கண்ணுக்கினியான்" 333
*பேராசிரியர் சுப. அண்ணாமலை*

6. ஆழ்வாரின் எதார்த்த உவமைகள் 337
*முனைவர் க. விசயன்*

# தமிழ்ப் பாண்டித்துரை வேந்தர்

"சித்திரத்தில் நீயிருப்பாய் சிந்தையுளே வீற்றிருப்பாய் சிறப்பாகச் செய்த
புத்தகத்தில் நீயிருப்பாய் புலவர்கள்தம் பாவிலெலாம் புகழாய் நிற்பாய்
பத்திரிகை தனிலிருப்பாய் தமிழ்ப் பாண்டித்துரை வேந்தே பாரிலெங்கும்
நித்தியமாயிருக்கும் நினைநிலங்கடந்தான் என்று உலகர் நிகழ்த்தல் என்னே"!

எனச்சென்ற நூற்றாண்டின் தொடக்கத்தில் நாகையிலிருந்து வெளிவந்த நீலலோசனி இதழ் ஆசிரியர், தமிழுக்குப் பாண்டித்துரை வேந்தர் ஆற்றிய அரும்பணியை வியந்துள்ளார்.

செந்தமிழ் வளர்க்கும் சேதுபதி மரபு நீடூழி வாழ்க!

அன்மையில் அமெரிக்க நாட்டின் கலை நகரமாக விளங்கும் சான்பிரான்சிசுகோ நகரில் கருத்தரங்கில் கலந்துகொண்டு உரையாற்றிய பேராசிரியர் கதிர்மகாதேவன் அவர்கள் மதுரைத் தமிழ்ச்சங்கத்தில் புதியயுகத்தின் அறிவுச்செல்வமாகப் போற்றப்படும் கணினிப்பயிற்சி மாணவர்களுக்கு அளிக்கப் படுவதைக் குறிப்பிட்டுள்ளார் என்பது மகிழ்ச்சிக்குரியதாகும்.

மதுரைத் தமிழ்ச்சங்கம் அவர்தம் பெருமிதத்தையும் தமிழ் நெஞ்சத்தையும் நினைந்து மகிழ்கிறது.

அவர்கள் அக்கருத்தரங்கில் படித்த ஒப்பிலக்கிய நோக்கில் அமைந்த கட்டுரை இவ்விதழில் அணிசெய்கிறது. சங்க இலக்கியத்தோடு மேலை நாட்டுக் கவிஞர்களை எடுத்துக் காட்டியிருப்பது படித்து இன்புறுதற்குரியதாகும்.

பேராசியர் இராம.சுந்தரம் அவர்கள், தமிழ்மூலம் தொழிற்கல்வி வெற்றிபெற நாம் செய்யவேண்டியது, 'தமிழே பயிற்றுமொழி' என்கிற கொள்கை அறிவிப்பும் செயல்பாடும்தான் என்பதை வலியுறுத்தி எழுதிய கட்டுரை வாடிய பயிருக்கு நீர் போல 'தமிழில் தொழிற்கல்வி' என்னும் தலைப்பில் இவ்விதழை அணிசெய்கிறது.

முத்தமிழில் ஒரு பகுதி நாடகத்தமிழ், ஆனால் இன்று தமிழில் இயலும் இசையும் ஒலிக்கின்றன. நாடகத்தமிழ் எங்கே? என்று கேட்கும் நிலை உள்ளது. பேராசிரியர் சிவக்கண்ணன்,

"மதுரையும் நாடகக்கலையும்" என்ற தலைப்பில், மதுரையின் பின்னணியில் மேடை நாடகக் காட்சிகளைக் கண்முன் கொண்டுவந்து நிறுத்தியுள்ளார்.

பேராசிரியர் சுப. அண்ணாமலை அவர்கள் மணிவாசகரின் திருவெம்பாவைப் பாடல்களுக்குத் தொடர்கட்டுரை எழுதுகிறார்கள். இவ்விதழில் நான்காவது பாடல் விளக்கம் சொல் ஓவியமாக விளங்குவதை மனத்திரையில் கண்டு மகிழலாம். கண்டுமகிழ்க.

(பெருமாள் திருமொழியைப் பாடினால் மரங்கள் நின்று மதுதாரைகள் பாயும் மலர்கள் வீழும் வளர் கொம்புகள் தாழும் என்பர்.) ஆனால் முனைவர் க.விசயன் ஆழ்வார் தம் உவமைகள் எதார்த்தங்கள் என ஆய்வுசெய்துள்ளது ஒரு பார்வை மாணவர்களுக்கும் ஆய்வாளர்களுக்கும் இவ்விதழ் சிந்தனைக்கு விருந்தாக வெளிவருகிறது.

பதிப்பாசிரியர்

# தமிழும் இணையமும்

முனைவர் கதிர் மகாதேவன்
முன்னைத்துணை வேந்தர்
தமிழ்ப் பல்கலைக்கழகம் தஞ்சாவூர்
ஆய்வுப்பெருந்தகைப் பேராசிரியர் (பல்கலைக்கழக மானியக்குழு)
தொ.பேசி: 0452-533742
இணையம் : ckm@eth.net

இக்கட்டுரை அமெரிக்காவிலுள்ள சான்பிரான்சிசுக்கோ நகரில் நடைபெற்ற அகில உலகத்தமிழ் இணைய மாநாட்டுக் கருத்தரங்கில் 28.10.2002 அன்று படித்து, ஆங்கிலத்தில் விளக்கப் பெற்றது. அவ்வமயம் மதுரைத் தமிழ்ச் சங்கம், தமிழ் பயிலும் மாணாக்கர்களுக்குத் தமிழில் கணினிப் பயிற்சி அளிப்பது குறிப்பிடப் பெற்றது.

## இணையத்தில் உள்ளீட்டு உருவாக்கம்

தமிழ் நாட்டிலிருந்து உலகின் பல நாடுகளுக்கும், தமிழர்கள் சென்று உள்ளனர். அந்த அந்த நாடுகளின் தேவைகளுக்கு ஏற்ப, இவர்களின் வேலைகள் அமைந்துள்ளன. எடுத்துக்காட்டாக, மௌரேஷியஸ் நாட்டிற்கு முதலில் சென்ற தமிழர்கள் அங்குள்ள கரும்புத் தோட்டங்களில் வேலை செய்யச் சென்றனர்; அப்படிச் சென்றவர்களின் படிப்பறிவு பெரும்பாலும் குறைவாக இருந்தது. பல தலைமுறைகளாக அத்தீவில் தங்கியவர்கள் பலர் தமது தாய்மொழியாகிய தமிழை மறந்து விட்டனர். தமிழும் பிரெஞ்சும் ஆங்கிலமும் இன்னபிற மொழிகளின் கலப்பால் தோன்றிய "கிரியோல்" என்னும் மொழியை இவர்கள் பேசுகின்றனர். கடவுளர்களை வணங்கும் விதத்தாலும், பண்பாட்டாலும் தங்களைத் தமிழர்கள் என்று அடையாளம் காட்டிக் கொள்கின்றனர். இத்தகையோருக்குத் தமிழ்மொழி கற்பித்தலும் கற்றலும் வேறுபடுகின்றன.

## நாடும் தேவையும்

ஆனால், அமெரிக்க நாட்டில் இன்றைய சூழலில் பணிபுரிவோர் மருத்துவர்களாகவும் பொறியியல் வல்லுநர்களாகவும் பேராசிரியர்களாகவும் பிற தொழில்கள் செய்வோராயும் காணப்படுகின்றனர். அவர் தம் தமிழறிவு

அமெரிக்காவில் குடியேறிய கால அளவைப் பொருத்துக் காணப்படுகிறது. தாயும் தந்தையும் தமிழர்களாய் இருந்தாலும், பிள்ளைகள் தமிழில் பேசும் பழக்கத்தைப் பெரிதும் மேற்கொள்வதில்லை. ஆண்டிற்கு ஒரு முறை சிலர் தம் குழந்தைகளுடன் தமிழ் நாட்டிற்கு வருவதுண்டு. அமெரிக்காவில்பிறந்த தமிழ்க் குழந்தைகள், தமிழ் நாட்டிற்கு வரும்போது உறவினர்களிடமும் தாத்தாவுடனும் பாட்டியுடனும் பேச முடியாமல், திண்டாடுவதைக் காணலாம். அமெரிக்காவில் பிறந்த தமிழ்க் குழந்தைகள், தமிழ் கற்பதினால் என்ன பயன் விளையும்? என்று கேட்கிறார்கள். சுருக்கமாகச் சொன்னால், தமிழ் கற்றால் அமெரிக்காவில் அது சோறு போடுமா? என்ற வினாவை எழுப்புகிறார்கள்; இதற்கு நேரடியாகப் பதில் சொல்ல முடியாது. அமெரிக்க வாழ் முதல் தலைமுறையினர் தங்கள் குழந்தைகள் தமிழைக் கற்க வேண்டும் என்றும், தமிழர்களின் பழக்க வழக்கங்களையும் பண்பாட்டையும் அறிந்து கொள்ள வேண்டும் என்றும் எண்ணலாம்.

அமெரிக்காவில் பல்வேறு நாடுகளில் இருந்து குடியேறியவர்கள் மிகுதியாகக் காணப்படுகின்றனர். எடுத்துக்காட்டாகச் சீனர்கள் A B C என்றும் O B C என்றும் பிரிக்கப்படுவதாக் கூறுவர். A B C என்றால் American Born Chinese என்றும் O B C என்றால் Off-the Boat Chinese என்பர். இவ்விருவருக்கும் இடையே சீனமொழி பேசுவதிலும் எழுதுவதிலும் பண்பாட்டு இயல்புகளைப் புரிந்து கொள்ளுவதிலும் வேறுபாடுகள் காணப்படுகின்றன என்று கூறுவர். ஏறக்குறைய தமிழர்களின் நிலையும் இதைப்போன்ற தேயாகும்; தலைமுறை இடைவெளிக்கு ஏற்பத் தமிழ் மொழியைத் தெரிந்து கொள்ளுவதிலும் கற்பதிலும் வேறுபாடுகள் உள்ளன. அமெரிக்காவில் வாழும் தமிழர்களுக்கும் பிறருக்கும் தமிழ்ப் பண்பாடு, இசை, ஆன்மீகம் முதலியவற்றை அறிந்து கொள்வதில் நாட்டம் உண்டு என்று அறிகிறோம்.

**இணையத்தின் செல்வாக்கு**

இன்று அறிவியலின் சாதனை மூலம் உலகெங்கிலும் உடனுக்குடன் தொடர்பு கொள்ள இணையம் (Internet) உள்ளது. ஒரு செய்தி உடனுக்குடன் பரவ வேண்டுமானால், அதில் மக்களுக்கு ஆர்வம் ஏற்பட வேண்டும். சில ஆண்டுகளுக்கு

முன்னர், தமிழ் நாட்டில் தலைவர் ஒருவர் இறந்து விட்டார். அச்செய்தி, தமிழ் நாட்டின் மூலை முடுக்குகளுக்கெல்லாம் ஐந்தே மணித்துளியில் சென்றடைந்தது; இதற்குரிய காரணத்தைத் தொலை தொடர்புத் துறையினர் ஆய்வு மேற்கொண்டனர்; பின்னர்க் காரணத்தைக் கண்டனர். எந்த ஒரு செய்தியில் மக்களுக்கு ஆர்வம் இருக்கிறதோ அந்தச் செய்தி மிக விரைவில் பரவுகிறது என்ற பொதுவான உண்மை கண்டறியப்பட்டது.

இதைப்போல அமெரிக்காவில் வாழும் தமிழர்களும் பிறரும் எந்தக் கருத்தில் ஆர்வம் கண்டுள்ளனர் என்பதை அறிய வேண்டும்; அந்தக் கருத்தை இணையத்தில் வலம் வர வைத்தால், கட்டாயம் அனைவருக்கும் தமிழறிய ஆர்வம் ஏற்படும்.

இந்தக் கட்டுரையில் ஒப்பீட்டு நோக்கில் இலக்கிய அடிக்கருத்துக்கள் எவ்வாறு மக்கள் மனத்தில் பொதுவாக இந்த நாட்டில் வாழ்பவர் ஆர்வத்தைத் தூண்டும் என்பதை ஆய்வதே நோக்கமாகும்.

**உலக மக்களின் ஆர்வம்** (Thematalogy)

"அடிக்கருத்தியல்" என்றால் என்ன? உலகம் முழுவதிலும் அறிவியல் படிப்பவர்களுக்குக் கதை, கட்டுரை, கவிதை முதலியவற்றைப் படிப்பதிலும் அறிந்து கொள்வதிலும் ஆர்வம் சாதாரணமாக உண்டு. அதைப்போலக் கலையியல் படிப்பவர்களுக்கு அறிவியல் அறிவதில் ஆர்வம் உண்டு. இணையத்தின் மூலம் ஒப்பீட்டு நோக்கில் தமிழ்க் கவிதைகளைச் சுவைப்பதற்கு வழிவகை செய்தல் நன்று; இதன் வழி உலகில் பல நாடுகளில் வாழும் தமிழர்களைத் தமிழோடும், தமிழ் பண்பாட்டோடும் இணைக்க முடியும். தமிழ் அறியாத பிற நாட்டவர் தமிழ் நாட்டிற்கு வந்து தங்கிய போது, அவர்கள் தமிழின்பால் கொண்ட காதல் மிகப் பெரிதாக உள்ளது. குறிப்பாகக் கிறிஸ்தவப் பாதிரிமார்கள் தமிழ் இலக்கியத்தில் பேரார்வம் காட்டினர். ஜி.யூ. போப், வீரமாமுனிவர், கால்டுவேல் போன்றோர் தமிழ் மொழியின்பாலும் கவிதையிலும் ஈடுபாடு கொண்டு, தமிழர்களே அறியாத பல உண்மைகளைக் கண்டுபிடித்து நிலை நாட்டியுள்ளனர். அவர்தம் வரலாற்றை

ஆராயும் போது, அவர்கள் தமிழைக் கற்க அவர்கள் பட்டபாடு தெளிவாகத் தெரிகிறது. தமிழ் கற்கத் தமிழாசிரியர்களை நாடித் தேடி ஓடினர். ஆனால், இன்று விரைவாகவும் முறையாகவும் தமிழ் மொழியையும் தமிழ் இலக்கியத்தையும் கற்கவும் கற்பிக்கவும் இணையம் ஓர் சாதனமாக விளங்குகின்றது.

இணையத்தை, அறிவியல் மொழிக்குத் தந்த பரிசு எனலாம். உலகின் பல்வேறு பாகங்களில் ஒரு மொழியைக் கற்பதற்கு முதலில் அந்த மொழியில் உள்ள எழுத்துக்களின் வரி வடிவத்தையும் ஒலி வடிவத்தையும் கற்றுக் கொள்ள வேண்டும் என்று எண்ணுகின்றனர்; அதில் தவறு ஒன்றுமில்லை;

ஆனால், மொழியை மட்டும் படிப்பதனால் ஆர்வம் பொதுவாக வளர்வதில்லை. ஒரு மொழியில் உள்ள இலக்கிய அடிக்கருத்துக்களை ஒப்பீட்டு முறையில் பயின்றால், அது ஒருவரை மேலும் மேலும் அம்மொழியை அறிந்து கொள்ளும் ஆர்வத்தைத் தருகிறது. பயன்பாட்டிற்கு மட்டும் மொழி என்று சிலர் தப்புக் கணக்குப் போடுகின்றனர். இது எப்படி இருக்கிறது என்றால், குழந்தை வளர்ந்தால் மட்டும் போதும் என்று எண்ணுவது போல உள்ளது. அன்பும் பற்றும் பாசமும் பிடிப்பும் காட்டும் பெற்றோர்கள் எதற்கு? வேண்டாம் என்று சொல்லி விட்டுக் குழந்தை வளர்வதற்குப் பால், ரொட்டி போன்ற உணவுப் பொருட்களைக் கொடுத்தால் மட்டும் போதுமா? அக்குழந்தைக்கு நற்குணங்கள், "மனிதம்" எனும் பண்பாடு அமையக் கற்றுத் தரவேண்டாமா?.. மனித நேயம் வளர்வதால் தான் மனிதன் ஆகிறான்; அந்நேயம் வளரவில்லை என்றால் மனிதன் பயங்கர விலங்காக மாறக்கூடும்.

**மொழி பேசும் விலங்கு**

இத்தனை அறிவியல் முன்னேற்றங்களும் எதற்காக? மனிதனை மொழி பேசும் விலங்காக மாற்றுவதற்கா? என்ற வினா எழுகின்றது. ஒரு மொழியைப் பேசுவதற்கு மட்டும் படித்தால் அது நெடுங்காலம் நின்று நிலைப்பதில்லை; இலக்கியத்தோடு இணைத்துப் படித்தால்தான் அந்த மொழியில் பிடிப்பும், மேலும் கற்க வேண்டும் என்ற ஆர்வமும் மக்களுக்கு ஏற்படும்.

எனவே, பழந்தமிழ் இலக்கியம் முதற்கொண்டு இன்றை

இலக்கியம் வரை ஒப்பீட்டு நோக்கில் இணையத்தின் வழி பரப்புவதற்கு முயற்சி எடுத்துக் கொள்ளவேண்டும். குறுந்தகடுகளில் (CD Rom) நூல்கள் பதிவு செய்யப்படுகின்றன. நூலகக் கணிப்பு (Digital Library)உருவாக்கப்பட்டுள்ளது. தமிழ் இணையப் பல்கலைக்கழகத்தில், தமிழ் மொழியைக் கற்பிப்பதற்குப் பாடங்கள் எழுதப்பட்டுள்ளன. அதே நேரத்தில் தமிழ் பண்பாட்டினையும் நாகரிகத்தினையும் கலைகளையும் வரலாற்றினையும் அறிவதற்கு விரிவான பாடத்திட்டங்கள் எழுதப்பட்டுள்ளன. தமிழர்களும் பிறமொழியினரும் தமிழ் கற்பதில் ஆர்வம் காட்ட வேண்டுமானால், ஒப்பீட்டு நோக்கில் இலக்கியத்தைக் கற்றுத்தருவதே மிகுந்த பயனளிக்கும்.

### இன்பியல் ஒப்பீடு

மனிதனாகப் பிறந்த ஒவ்வொருவனும் ஒவ்வொரு உயிரினமும் இன்பத்தை விரும்பி மறைமுகமாகவோ நேரடியாகவோ அதனைத் தேடிச் செல்வதைக் காணலாம். இந்த உண்மையை, "இன்பம் என்பது எல்லா உயிர்க்கும் தான் அமர்ந்து வருஉம் மேவற்றாகும்" என்று தொல்காப்பியர் குறிப்பிடுகிறார். உலகில் எந்தப் பாகத்தில் இருந்தாலும், மனிதன் பொருளீட்டி இன்பத்தைப் பெற முயற்சி செய்கிறான். இந்த எண்ணம் மனிதன் தோன்றிய காலத்திலிருந்து இன்று வரை தொடர்கிறது. இதுவே இலக்கியத்தில் பாடுபொருள்களாகவும் ஊடுபொருள்களாகவும் தேடுபொருள்களாகவும் உள்ளன. தமிழில் இலக்கியத்தில் பாடுபொருளாக இன்பம், பொருள், அறம் என்ற மூன்றையும் சங்க காலம் தொட்டு இன்று வரை வைத்துள்ளனர் என்றாலும், மேற்கூறிய மூன்றினோடு வடமொழி கூறும் இலக்கியக் கொள்கையில் உள்ள வீடு என்பதையும் இணைத்துள்ளனர். கிரேக்கர்களும் இலக்கியப் பாடுபொருளாக மூன்றினைக் கூறியுள்ளனர்.

> "Best for mortal is health;
> Second best, charming personal beauty;
> Third, wealth obtained without fraud;
> Fourth, to be young amongst one's friends"
>
> -Hans Licht

### இதன் பொருள் வருமாறு :

*"நிலையிலா மாக்கட் குலைவிலா முதல்நலம்*

*உடல் நலமாகும்; உடனடுத் திடுவது*
*மேனி யழகாம்; மேன்மையி லடுத்தது*
*வஞ்சனை யில்லா வளமைச் செல்வமாம்;*
*நாலாம் பேறு நலஞ்சேர் இளமையோ*
*டிணங்கிடு நண்பரோ டிணைந்திடலாகும்"*

இப்பாடலில் உடல் நலமும், மேனி அழகும் இன்பத்திற்கு வழி வகுக்கும்; வஞ்சனை இல்லா நிலை அறத்தையும், செல்வத்தை அடைதல் பொருளையும் கவிதைகளின் நோக்காகக் காட்டியுள்ளனர். மேற்கூறிய மூன்று அடிக்கருத்துக்களும் வடமொழியிலும் காணப்படுகின்றது. அதில் மோட்சம் என்ற வீட்டுப் பொருளையும் பாடல் அடிக்கருத்துக்களில் இணைத்துக் கொண்டார்கள். இவ்வடிக்கருத்தினைத் "தர்மார்த்த காம மோட்சம்" என்று வடமொழி இலக்கியக் கொள்கை கூறுகின்றது.

கிரேக்க இலக்கியத்தில் காணப்படுவது போலத் தமிழ் இலக்கியத்திலும் இன்பம், பொருள், அறம் என்ற மூன்று அடிக்கருத்துக்கள் கவிதைகளில் வலியுறுத்தப்படுகின்றன. திருவள்ளுவரும் மேற்கூறிய மூன்று அடிக்கருத்துக்களைப் பாடுபொருளாக வைத்து அறத்துப்பால், பொருட்பால், இன்பத்துப்பால் என்று மூன்று பிரிவுகளாகத் திருக்குறளைப் பிரித்துள்ளார். இணையத்தில் தமிழில் ஆர்வம் ஏற்படப் பல உத்திகளைக் கையாளலாம். அவற்றில் அடிக்கருத்தியலில் ஒப்பிட்டுக்காட்டுவது ஒன்றாகும். தமிழ் மொழியை நேரடியாகப் படிக்கவில்லை என்றாலும் "தமிழ்" பற்றி அறிய அனைவரும் ஆர்வம் காட்டுவர்.

இந்த ஆய்வுக் கட்டுரையில் இன்பம் என்ற பொருளை எவ்வாறு இலக்கியத்தில் இணையத்தின் வழி காட்டலாம் என்பது பற்றிக் காண்போம். ஏனெனில், இன்பத்தைத் தேடாத உயிரினமே உலகில் இல்லை. இலக்கியத்தில் இன்பத்தைப் பாடுபொருளாகக் கொண்ட காதற் கவிதைகளை ஒப்பிட்டு இணையத்தில் இணைக்கும் பொழுது அவற்றின் கருத்துக்களைப் பார்ப்பதற்கும், கேட்பதற்கும், சிந்திப்பதற்கும் வாய்ப்புக் கிட்டுகிறது. ஒரு பாடலில் வரும் அடிக்கருத்தை ஒப்பிட்டுக் காட்டும் பொழுது, அத்தகைய பாடல்களைத் தெரிந்து கொள்ள வேண்டும் என்ற ஆர்வம் பெருகும் என்பது உறுதி; எல்லா

மனிதர்களுக்கும் இந்த ஆர்வம் அடிமனத்தில் உள்ளது; கவிதையின் அடிக்கருத்துக்கள் உலகத்தில் எல்லா மொழிகளிலும் இலக்கியங்களிலும் ஒன்று போலக் காணப்படுகின்றன.

**திருப்பு முனை** (Turning Point)

உலக வரலாற்றில் எண்ணங்கள் எழுத்தோடு இணைந்தது ஓர் இனிய விபத்தாகும் என்று அறிதல் நன்று. இன்று எண்ணங்கள் செல்நெறியில் ஒரு திருப்புமுனை ஏற்பட்டுள்ளது. எண்ணங்கள் எழுத்துக்களோடு இணைந்ததோடு மட்டுமல்லாமல் இணையத்தோடும் இணைந்து உலகெங்கணும் வலம்வரத் தொடங்கியுள்ளன.

1999 - கணினி விசைப் பலகை உலகம் முழுவதும் ஒரு நிரல் ஆக்கப்பட்டுள்ளது; காலம் செல்லச் செல்ல எழுத்துக்களின் விசைப் பலகையில் மேலும் சீர்மையும் ஒருமையும் முன்னேற்றமும் இடம்பெறும் என்பதில் ஐயமில்லை. இவ்வாய்ப்பு உலகமெல்லாம் தமிழ் பரவ வழி வகுக்கும் என்று நம்பலாம். இதற்கு இருவகை முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. ஒன்று கணினி அறிந்த பொறியியல் வல்லுநர்கள் உருவாக்கிய வலைப்பின்னல் (Internet) பிறிதொன்று இணையத்தில் ஊடுபொருள் உருவாக்கத்திற்கு (Content creation) எடுத்துக்கொள்ளப்படும் முயற்சியாகும். தமிழ் படிப்பதில் ஆர்வம் ஏற்படுவதற்காக சான்றிதழ் (Certificate), பட்டயம் (Diploma), பட்டம் (Degree) முதலியவை வழங்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. இந்த முயற்சி வெளிநாடுகளில் பயனளிக்கும் என்று எதிர்பார்க்கலாம்; மேற்கூறிய படிப்புக்களுக்குப் பெரும் வரவேற்பு உள்ளது.

**உள்ளீட்டு உருவாக்கம்**

அறிவியியலைப் பொறுத்த மட்டில் வளரும் நாடுகள் பெரும்பாலும் வளர்ந்த நாடுகளின் உதவிகளை எதிர்நோக்க வேண்டிய நிலையில் உள்ளன. தமிழ்நாடு வளரும் நாடாகும். ஆனால், இலக்கியம், பண்பாடு, கலைகள், ஆன்மீகம் இன்ன பிறவற்றில் மேலை நாட்டினர் ஆர்வம் கொண்டுள்ளனர் எனலாம்.

உலகில் பல நாடுகளில் வாழும் தமிழர்களைத் தமிழோடும் பண்பாட்டோடும் இணைக்க முடியும்: இந்தியத் தமிழினத்தின் பண்பாட்டின் ஒருமைப்பாட்டை நிலைநாட்ட இயலும்.

## இணையத்தில் செல்நெறி தமிழ் மொழியும் இலக்கியமும்

மொழியும் இலக்கியமும் ஓரினத்தின் கண்களாகும். விஞ்ஞானம் எங்கு முடிவடைகிறதோ, அந்த இடத்திலிருந்து மெய்ஞ்ஞானம் என்ற தத்துவ உண்மை தொடங்குகிறது. இவ்விரு நோக்கங்களையும் இணையத்தின் போக்கு வழியே காட்ட இயலும்; அமெரிக்காவில் வாழும் தமிழர்களும் பிறரும் தமிழ் இணையத்தில் ஈடுபாடு கொள்ள என்ன செய்யலாம் என்று சிந்திக்கலாம்.

## இத்தனை இருந்தும் சிக்கல் யாது?

இலக்கியத்தை இணையத்தின் மூலம் தருவது அவ்வளவு எளிதான செயல் இல்லை. ஒரு கவிதையின் பொருளை எழுதிவிட்டால், வேலை முடிந்தது என்று எண்ணுவது சிறப்பாகாது: எனவே, தமிழ் இலக்கியத்தில் கவிதையையும் மனித நல்லெண்ண நோக்கத்தில் ஆன்மீகத்தையும் இணையத்தின் மூலம் எப்படி எப்படியெல்லாம் ஒளி ஒலி பரப்ப இயலும் என்பதைக் காண்போம். ஒளி, ஒலி, காட்சி, எழுத்து எனவரும் இவற்றோடு இணைத்து, வண்ண ஊடகங்களில் உணர்த்த (Multimedia) வழிமுறைகள் யாதெனக் காண்போம்.

முதலில் புரிவதற்குக் கடினமானது என்று பலரால் எண்ணப்படும் சங்கப் பாடல் ஒன்றை இணையத்தின் மூலம் எவ்வாறு எளிதாகவும், ஆர்வத்தைத் தூண்டும் வகையிலும் உருவாக்கம் செய்து அனைவரின் கண்ணையும் கருத்தையும் கவர்வதோடு மட்டுமல்லாமல் அக்கவிதையை அறிபவர் உள்ளத்தில் தோன்றுமாறு செய்யும் வித்தகத்தை ஆராய வேண்டும்.

## ஒப்பீடு உணர்த்தும் அடிக்கருத்தியல்

இயற்கை நல்கும் அழகிய காட்சிகளைச் சங்க இலக்கியம் உணர்த்துவது உலகத்தில் எல்லோருடைய உள்ளத்தையும் கவரும் என்பதில் ஐயமில்லை.

மலைக்கு அழகு அருவியாகும். இப்பாடலில் மலை அருவியில் நீரோட்டம் பெருகி வருகிறது; காரணம், மலையில் மழைபொழிந்திருக்கிறது. இந்தச் சூழலில் காதலி ஒருத்தி தன் காதலனைக் காணாமல் தவிக்கிறாள். முதன் முறையாக இருவரும் கூடியபோது, காதலன் காதலிக்கு ஒரு வாக்குறுதி தந்தான்.. அது என்ன?.. என் உயிரே, உன்னை நான் என்றும் பிரியேன்; அப்படிப் பிரிந்தால் நான் உயிருடன் இருக்க மாட்டேன் என்று சத்தியம் செய்தான்; ஆனால், சிறிது காலம் சென்றபின் பிரிந்து சென்ற காதலன் வரவில்லை.

எவனொருவன் தான் தந்த வாக்குறுதியைக் காப்பாற்றவில்லையோ அவன் வாழும் நாட்டில் மழை பெய்யாது என்பது அக்காலத்தின் நம்பிக்கை ஆகும். இதனைக் கருத்தில்கொண்ட தலைவி மலை நாட்டில் மழை பொழிந்து அருவியில்நீர் வானத்திலிருந்து அழகாப் பொங்கி அருவியாக வீழ்கிறது.. இந்த நிகழ்ச்சி, பொய் சொன்னவன் நாட்டில் நிகழுகிறது என்று தன் தோழியிடம் கூறினாள்; இப்பொழுது பாடலைக் காண்போம்..

*"இலங்கும் அருவித்தே*
*இலங்கும் அருவித்தே!*
*வானின்று இலங்கும்*
*அருவித்தே! தானுற்ற*
*சூள்பேணான் பொய்த்தான் மலை"*

மேலே சொல்லிய பாடலை ஒளி, ஒலி, காட்சி, எழுத்து என வரும் இவற்றோடு இணைத்து வண்ண ஊடகங்கள் மூலம் (Multimedia) உணர்த்த வேண்டும்.

ஆனால், காதலியின் மனநிலையை எப்படிக் காட்டுவது?.. காதலி சோகமே உருவாய்க் காதலனை எதிர்நோக்கிக் காத்திருக்கும் ஓவியம் ஒன்றினை வரைந்து காட்டிவிடலாம் என்று நினைக்கிறீர்களா? அவ்வாறு காட்டினால், இப்பாடலின் ஊடுபொருளாம் குறிப்புப் பொருள் தோன்றாது.

காத்திருக்கும் காதலியின் கண்களுக்கு மலையில் மழை பொழிந்து அருவியில் நீர் பொங்கி வரும் காட்சி, அவளுக்கு ஆறுதலைத் தருகிறது!

காதலன் வருவான் என்று இயற்கை காதலிக்குச் சொல்கிறது; எப்படிச் சொல்கிறது? பொய் சொல்லித் தலைவியிடம் இன்பம் துய்த்துப் பிரிந்த காதலன் என்று எண்ணாதே! "அக்கிரமம்" செய்பவன் ஊரில் மழை பொழியாது! காதலன் வாழும் மலைநாட்டில் மழை பொழிகிறது! எனவே, காதலன் நல்லவன்; ஏமாற்றமாட்டான்; விரைவில் உன்னை மணம் முடிப்பான் என்று இயற்கை கட்டியம் கூறுகிறது என்பது தான் இப்பாடலின் குறிப்புப் பொருளாகும். இப்பொருளை இணையத்தின் மூலம் காட்டுவது அவ்வளவு எளிதான காரியமன்று; தலைவியைப் பிரிய மாடடேன் என்று கூறுபவன் பிரிந்து சென்றான்; என்றாலும், அவன் நாட்டில் மழை பொழிகிறது என்ற காரணத்தினால் தலைவன் நல்லவன் என்ற கருத்தையும் மீண்டும் தலைவியைச் சந்திக்க வருவான் என்ற கருத்தையும் எழுதிக் காட்ட முடியுமே தவிர காட்சியில் காட்டுதல் எவ்வாறு என்ற கேள்வி எழுகின்றது.

இத்தகைய இயற்கை உணர்த்தும் கருத்துக்கள் பாடல்களில் இடம்பெறும் பொழுது, வண்ணக் காட்சிகளாகச் சிலவற்றைக் காட்டி அக்காட்சிகள் தரும் குறிப்புப் பொருளை எழுத்துகளிலே எழுதியும், பேசியும் கருத்துக்களை அறிவிக்க முயல்வதே சாலநன்று.

உதாரணமாகச் "ஷெல்லி" எழுதிய இயற்கை சுட்டும் காதல் பாடல் ஒன்றினை ஒப்பிட்டுக் காண்போம்.

" The fountains mingle with the rivers
And the rivers with the ocean
The winds of Heaven mix for ever
With a sweet emotion
Nothing in the world is single
All things by a law divine
In one another being mingle
Why not I with thine"

-P.B.Shelley

தமிழில் இத்தகையதொரு இயற்கைப் பாடல் ஒன்று உண்டு. அப்பாடல் வருமாறு;

*"யாயும் ஞாயும் யாரா கியரோ*
*எந்தையும் நுந்தையும் எம்முறை கேளிர்*
*நானும் நீயும் எவ்வழி அறிதும்*

*செம்புலப் பெயல் நீர் போல*
*அன்புடை நெஞ்சம் தாங் காலந்தனவே"*

**- செம்புலப்பெயல்நீரார்**

**இப்பாடலின் பொருள் வருமாறு.**

"என்னுடைய தாயும் உன்னுடைய தாயும் யார் என்று நமக்குத் தெரியாது. என்னுடைய தந்தையும் நின்னுடைய தந்தையும் உறவினர்கள் இல்லை. உனக்கும் எனக்கும் இதற்கு முன்னால் அறிமுகம் இல்லை. எங்கோ வானத்திலிருந்து வருகின்ற தூய்மையான மழை நீர் செம்மண் நிலத்தில் விழும் பொழுது அதன் நிறம் மணம் குணம் ஆகியவை மாறிவிடுகின்றன. அதுபோல உனது நெஞ்சில் நான் கலந்தபொழுது என் தனித்தன்மையை இழந்து நீயும் நானும் ஒன்றாகிவிட்டோம்" என்பதே இப்பாடலின் நேர் பொருளாகும்.

மேலே கூறப்பட்ட இரு பாடல்களிலும் கடைசியில் காணப்படும் இரண்டு வரிகள் எண்ணங்களின் எதிரொளியாகும். இவற்றைப் படங்கள் போட்டு வண்ண ஓவியங்கள் தீட்டிக் காட்ட இயலாது. ஆனாலும், ; பற்கைச் சூழலைக் காட்டிக் காதல் இயற்கையும் அவ்வாறே ஆகும் என்று எழுத்திலோ பேச்சின் மூலம் விளக்கமோ தருதலே வழியாகும் இக்கருத்தை வண்ண வடிவில் சித்திரமாகக் காட்டுவதற்கு உத்திகள் சொல்ல இயலுமா?

## விஞ்ஞானமும் மெய்ஞ்ஞானமும்

இந்தியாவில் பழங்காலம் முதல் விஞ்ஞானமும் மெய்ஞ்ஞானமும் ஒன்றுடன் ஒன்று கலந்து வாழ்வில் இடம்பெறத் தொடங்கின. இன்று இந்தியக் குடியரசுத் தலைவராக விளங்குகின்ற அறிவியல் மேதை, அப்துல்கலாம் அவர்களும் ஆன்மீகத்தில் நம்பிக்கை கொண்டவாராக இருப்பதை யாவரும் அறிவர். ஆன்மீகத்திற்கும் மதத்திற்கும் நேரடியான தொடர்பு இல்லை; ஆனால், மதவாதிகள் ஆன்மீகத்தை ஆக்கிரமித்துக் கொண்டனர். தத்தம் கடவுளர்களை ஆன்மீகத்தின் வழி அறிமுகப்படுத்தினர்.

ஆன்மீகத்தின் ஒரு பகுதியாக விளங்கும் தவம் என்பது, பகுத்தறிவுவாதிகளும் ஏற்றுக்கொள்ளும ஆற்றல் பெற்றது. "எண்ணிய எண்ணியாங்கு எய்துவர் எண்ணியர் திண்ணியராகப்

பெறின்" என்று வள்ளுவர் கூறுவது உலகெங்கினும் பரப்புவதற்குரிய உண்மையாகும். ஆனால், மதவாதிகளோ தவநெறியைக் காட்ட விழையாமல் தங்களையே முன்னிலைப்படுத்திக் கொள்ளத் தலைப்பட்டனர். இதனால் ஆன்மீகத்திற்கு எதிர்ப்புகள் ஏற்பட்டன. இணையத்தின் வழி, தவம் செய்யும் உத்தியைப் பரப்பும் பொழுது அங்குச் சமயவாதிகளின் இடையீடு ஏற்பட வாய்ப்பில்லை. நரம்பியல் மருத்துவர்கள் மூளையில் ஏற்படும் பல்வேறு நோய்களுக்குத் தவம் செய்வதைப் பரிந்துரை செய்கின்றனர்.

திருவள்ளுவர் எந்த மதத்தைச் சார்ந்தவர்?.. அவருக்குச் சமயம் இல்லை. ஆனால் ஆன்மீகத்தின் இன்றியமையாத பகுதியாகிய தவத்திற்குத் திருவள்ளுவர் பேரிடம் தருகிறார். ஓர் அதிகாரமே "தவம்" என்ற தலைப்பில் இயற்றியுள்ளார். தவத்தின் பொருளையும் பெருமையையும் திருவள்ளுவர் வழி நின்று விளக்கலாம். திருமூலர் சுட்டிய கருத்துக்களை இணையத்தின் வழி புலப்படுத்தலாம்.

மூளைப்பகுதிக்கு நேரடியான மருத்துவம் செய்வது எளிதில்லை. தியானம் செய்வது தவத்தோடு தொடர்புடைய தாகும். மக்கள் பலருக்கும் இதில் நாட்டம் இருந்தாலும், பல்வேறு ஐயங்கள் தோன்றுகின்ற காரணத்தினால் அவ்வழியை மேற்கொள்ளாமல்உள்ளனர். பல தீய சக்திகள் தவத்தை தவறாக விளக்குகிற காரணத்தினால் மக்களுக்கு இதில் நம்பிக்கை ஏற்படுவதில்லை. மெய்யியல் தத்துவங்களை மனித வாழ்க்கையோடு தொடர்புபடுத்தி, தவம் மனிதனை வழி நடத்திச் செல்லும் என்ற உண்மையையும் இணையத்தின் வழி வெற்றியோடு நடத்தலாம். இந்த வித்தினை இங்குக் கூடியுள்ளோர் உள்ளத்தில் விதைக்க எண்ணுகிறேன். இந்த நாட்டில் பலரும் ஆன்மீகத்தில் ஈடுபட ஆர்வம் கொண்டவர்கள் என்று தெரியவருகிறது. ஆனால், அதை அறிய இயலாமல் வாழ்கிறார்கள்; இணையத்தில் ஆன்மீகச் சிந்தனைகளைக் காட்ட கருத்துக்கள் வரவேற்கப்படுகின்றன.

# தமிழில் தொழிற்கல்வி

*இராம. சுந்தரம்.*

மொழி ஒரு மனித சமுதாயத்தின் படைப்பாகும். அந்த மொழியைப் பேசும் மனிதசமுதாயம் வளரவளர அம்மொழியும் வளர்கிறது. இதை மகாகவி பாரதி "மனுஷ பாஷை மனுஷ வாழ்க்கையோடு ஒட்டி உடன் வளர்ந்த பொருள்கள் அல்லவோ?.... மனித அறிவு வளர்ச்சிக்கு பாஷை ஒரு கண்ணாடி. ஒரு நாட்டாரின் அறிவு வளர்ந்து கொண்டு வரவர, அந்நாட்டின் பாஷையும் விசாலமடைந்து வருகிறது. அந்நிய நாகரிகம், தாரித்திரியம், சரீரப்பலக்குறைவு, நோய், உற்சாகமின்மை முதலிய காரணங்களால் இப்போது இழிவு கொண்டு போயிருக்கும் தமிழ்நாட்டு ஜனங்கள், ஆங்கிலேயர் முதலிய சுதந்திர நாட்டினரைப்போல் விருத்தியடைந்து வருதல் அசாத்தியமாக இருக்கிறது என்பது ஒருவாறு மெய்யாக இருக்கலாம். அதற்குப் பாஷையைக் குற்றம் சொல்வதிலே என்ன பிரயோசனமிருக்கிறது? ஆடத்தெரியாத தாசி கூடம் போதாதென்பது போல ஈதை சொல்லுகிறாயே" என்று கேட்பார். "தமிழா, பயப்படாதே, ஊர்தோறும் தமிழ்ப் பள்ளிக்கூடங்கள் போட்டு ஐரோப்பிய சாஸ்திரங்கள் எல்லாம் தமிழில் கற்றுக் கொடுக்க ஏற்பாடு செய்" என்றும் வேண்டுவார்.

இன்று கல்வியின் பரப்பு விரிந்துள்ளது. பல துறைக்கல்வி; பலவகைக்கல்வி; பலநிலைக்கல்வி. இக்கல்வியைத் தாய் மொழி மூலம் கற்றலே சிறந்தது, பயன்தரத்தக்கது; என்பது கல்வியாளர் கருத்தாகும். தாய்மொழி மூலம் படிக்கும்போது மொழிச்சிக்கல், மொழித்தடை ஏற்படுவதில்லை மற்றொரு மொழிமூலம் பயிலும்போது பாடத்தைப்புரிந்து கொள்ளுவதோடு, மொழியிலும் பயிற்சிபெற வேண்டியுள்ளது. இந்த இருநிலைப்புரிதலைத் தாய்மொழிவழிக்கல்வி ஒருநிலைப் புரிதலாக மாற்றி விடுவதால், கல்வியில் கவனமும் ஆர்வமும் கூடுகின்றன. எனவேதான், தாய்மொழியைப் பயிற்றுமொழியாகக்கொண்டு கற்கவேண்டும் என்கின்றனர். பாரதியும் இதைத்தான் வலியுறுத்துகிறார்.

இன்று பெற்றோரும் மாணவர்களும் பெரிதும் விரும்புவது தொழிற்கல்வியே. பொறியியல், மருத்துவம், வேளாண்மை,

தகவல் தொடர்வியல் முதலிய பலவகைப்பட்ட தொழில் கல்வி இன்று பல நிலைகளில் கற்பிக்கப்படுகின்றன. இக்கல்வி இன்று தமிழகத்தில் பெரும்பாலும் ஆங்கிலம் வழியே கற்பிக்கப்படுகிறது. இதனை மாற்றி, தமிழ்வழிக் கற்பிக்க வேண்டும் என்கிற முயற்சி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இந்த முயற்சி வெற்றிபெற உதவும் வகையில் தமிழ்ப் பல்கலைக்கழகம் சில ஆண்டுகளுக்கு முன்பே பொறியியல், மருத்துவ இயல் பாடநூல்களைத் தயாரித்து வெளியிட்டது. கலைச்சொல் பட்டியல்களையும் உருவாக்கியது. இருந்தும், தமிழ் மூலம் தொழில்கல்வி என்பது இன்னும் நடைமுறைக்கு வரவில்லை. இதற்குக் காரணம், மொழியில் குறைபாடு அன்று, நமது மனப்போக்குதான்.

எந்தக் கல்வியையும் தமிழ் மூலம் கற்கலாம் என்பதற்கு எடுத்துக்காட்டாக, இன்று பெரிதும் விரும்பப்படும் ஒரு துறையான தகவல் தொடர்பியல் துறையைக் கொள்ளலாம். இத்துறைக்கல்வி தொடக்கத்தில் ஆங்கிலம் வழிதான் 5 ஆண்டுகளுக்கு முன் கற்பிக்கப்பட்டது. இப்பொழுது தமிழ்மூலம் கற்பிக்கப்படுகிறது. அதற்கான நூல்களும், கலைச்சொற்களும் தயாரிக்கப்பட்டு, பயன்பாட்டில் உள்ளன.

முதுகலைப்பட்டத்திற்கான இதழியல் மற்றும் மக்கள் தகவல் தொடர்பியல் பாடநூல்களை மதுரை காமராசர் பல்கலைக்கழகம் தயாரித்துள்ளது. இரண்டாண்டுக் கல்வி மொத்தம் 10 தாள்கள்:

**சில பயிற்சி வகுப்புகள்**

முதலாண்டுப்பாடங்கள்:

1. மக்கள் தகவல் தொடர்பியல் கோட்பாடுகள்
   (Concepts of Mass Communication)
2. மக்கள் தொடர்புச் சாதனமும் சமுதாயமும்
   (Mass media and society)
3. இதழியல் சட்டங்களும் ஒழுங்குநெறிகோட்பாடுகளும்.
   (Press laws and code of ethics. Journalism)
4. தகவல் மற்றும் தகவல் நுட்பவியல்
   (Information and information technology)

5. செய்முறைப் பயிற்சி-புகைப்படக்கலை, திரைப்படக்கலை, வீடியோ படக்கலை
(Practicals:- Photography, Cinematography, Videography)

இந்தத்தாள்களுக்கான பாடங்களைச் சில ஆங்கில நூல்களைப் பின்பற்றித் தயாரித்து உள்ளனர். அவை பெரும்பாலும் மொழிபெயர்ப்பாக இருந்தாலும், படிப்பதற்கு அவ்வளவு இடையூறாக இல்லை. ஆசிரியர்-மாணவர்-பாடம் இவற்றுக்கிடையேயான வினை-எதிர்வினை நன்கு செயல்படும் போது பாடத்தின் மொழிநடையும் புலப்பாட்டுத்திறனும் புரிதிறனும் தெளிவடையக்கூடும்.

அறிவியல் பாடங்களைத் தமிழில் கற்பிக்கவேண்டும் எனக்கூறும்போது, போதிய கலைச்சொற்கள் இல்லை என்பது ஒரு பெரிய குறையாகச் சொல்லப்படுகிறது. ஆனால், இந்தப் பாடநூல்களைப் படிக்கும்போது, ஆசிரியர்கள் கலைச்சொல் பயன்பாட்டில் இடருற்றதாகத் தெரியவில்லை. முடிந்த அளவு தமிழ்ச் சொற்களைக் கையாளுகின்றனர்; இயலாத கட்டத்தில் ஆங்கிலச் சொற்களையே தற்காலிகமாகக் கையாளுகின்றனர். கலைச்சொல்லியல் கோட்பாடுகளில் இதுவும் ஒன்று.

தகவல் நுட்பவியல் (Information technology) என்ற பாடப்பிரிவில் உள்ள மறுபடிவக்கலை, நுண்படி, புகைப்படக்கலை, வெப்பக்கதிரியக்கப் பதிவுமுறை, மின்னியக்கப் பதிவுமுறை, மறுபடிவ முறையின்பயன்பாடு, நுண்படிவிளக்கக் குறிவரை, நுண்பதிப்பு முறை, கணிப்பான், மின்னஞ்சல், நேரடித்தகவல் மீட்பு ஆகியன முறையே Reprography, Micrography, Photography, Thermography, Electrography, Applications of Reprography, Micrographics, Micro Publishing, Computer, electronic Mail, online information Retrieval என்பவற்றுக்கு நிகராகப் பயன்படுத்தப்பட்டுள்ளன.

கேமிரா வகைகள் பற்றிக்கூறும் மற்றொரு பாடம், Box camera, Folding Camera, electronic automatic camera, Miniature Camera, Studio camera ஆகியவற்றுக்கு நிகராக, பெட்டிக் கேமிரா, மடக்குக் கேமிரா, மின்னியல் தானியங்கிக் கேமிரா, மினியேச்சர் கேமிரா, ஸ்டுடியோ கேமிரா ஆகியவற்றைப்

பயன்படுத்துகின்றது. கேமிரா என்பதை 'ஒளிப்படக்கருவி' என மாற்றினால், பெட்டி ஒளிப்படக்கருவி என, பெட்டிக்கேமிரா'வை அழைக்கவேண்டிவரும். இது சரியெனப்படும்போது, இந்தக்கலைச்சொல் வழக்கிற்குவரும், அதுவரை, கேமிரா என்கிறசொல் பயன்பாட்டில் இருக்கும். ஆனால், இவற்றுக்குத் தரப்படும் விளக்கம் புரியும் வண்ணம் உள்ளதா என்பதுதான் முக்கியம். மடக்குக்கேமிரா பற்றிய விளக்கம் கதவுத்துவாரம், திறப்புநேரம், இவற்றை விருப்பப்படி வைத்துக்கொள்ளக் கூடிய பழமையான கேமிரா இதுவாகும். இக்கேமிராவை வேண்டும்போது திறந்து கொள்ளவும் தேவையில்லாதபோது சிறியதாக மடக்கிக்கொள்ளவும் முடியும். பெட்டிக்கேமிராவை விடத்திறன் மிகுந்த லென்ஸ் இருக்கும். அதிவேகமாகத் திறந்து மூடக்கூடிய கதவும் பலஅளவுகளில் வட்டவடிவில் விரிந்து சுருங்கும் நுண்ணிய தகடுகளால் ஆனதுவாரமும் இருக்கும். உருத்தெளிவாக்கலை எளிதாகச் செய்யத் தூர அறிவிப்புப் பார்வைக் கண்ணாடிகள் ( Range Finders) இணைக்கப் பட்டிருக்கும். சாதாரணமாக 31/4 x 21/4 செ.மீ.. அளவுள்ள படங்களை இதில் எடுக்கலாம். 120, 620 அளவு பிலிம்களில 8 படங்கள் எடுக்கலாம். ((மதுரை காமராசர் பல்கலைக்கழகம் இதழியல் எம்.ஏ., முதலாண்டு பிரிவு 3 (E) தாள் 5) இந்த விளக்கம் புரிகிறது. இதனைப் பலமுறை படிக்கும்போது, ஆங்காங்கே தெளிவுகருதி, உரைக்கட்டில் (discourse) சிற்சில சிறுமாற்றங்கள் செய்தலும் கூடும். இங்கே குறிப்பிட்டுச் சொல்ல வேண்டியது, கேமிராவகையில் ஒன்றான மடக்குக் கேமிரா பற்றி என் தாய் மொழியில் என்னால் விரைவில் படித்து எளிதில் புரிந்துகொள்ள முடிகிறது என்பதுதான். இதேபோன்று, மின்னஞ்சலின் சிறப்பு பற்றிய பகுதியும் தெளிவும் விளக்கமும் உடையதாகவே உள்ளது.

## இ-மெயிலின் சிறப்பம்சங்களும் நன்மைகளும்: -

1. இ. மெயில் அமைப்பில் தொலைதூரத்திலுள்ள தகவலை நாடுவோர் மற்றும் தகவலை அளிப்போர் தங்களது கணிப்பான் மூலம் தொடர்பு கொள்வதால் உடனடியாகத் தகவல் மாற்றம் ஏற்படுகிறது. (இ-மெயில் அமைப்பில் தொலைதூரத்திலுள்ள தகவல் பெறுவோரும் அளிப்போரும் தங்களது கணிப்பான் மூலம்

தொடர்பு கொள்வதால் உடனடித் தகவல்மாற்றம் ஏற்படுகிறது).

2. தேவைப்பட்டால் அனைத்துத் தகவல்களையும் தகவலைப்பெறும் இடத்தில் (Receiving end) சேமித்துத் தேவையான போது பயன்படுத்திக் கொள்ளலாம்.

3. இ-மெயிலுடன் பொதுத்தொலைபேசி இணைப்பு மூலம் தொடர்பு கொள்ள முடியும்....

இதைப்போலவே, மின்னணு இதழிகள் (electronic journal) சிடி-ராம், (Compact disc-Read only memory) போன்றவற்றை பற்றிய பாடங்களும் புரியக்கூடிய அளவில் உள்ளன என்பது கருதத்தக்கது. அண்மைக்கால வளர்ச்சியான இது தமிழகத்தில் சில ஆண்டுகளாகத்தான் அறியப்பட்டுள்ளது. ஆங்கிலத்தில் எராளமான கட்டுரைகளும் நூல்களும் வெளிவந்திருக்கலாம். அவை எல்லாம் தமிழகத்தில் கிடைக்கின்றன என்று கூறமுடியாது. கிடைக்கக்கூடிய சிலநூல்களின் அடிப்படையிலும், ஆசிரியர்கள் பெற்ற பட்டறிவின் அடிப்படையிலும் இப்பொருள்கள் பற்றிய கட்டுரைகளும் நூல்களும் சிறுகச் சிறுக வெளிவந்து கொண்டிருக் ்றன. மக்கள் தகவல் தொடர்பியல் கலைச்சொல்லகராதி (டாக்டர் ஆலிஸ்) என்கிற அண்மைக்கால வெளியீடு இத்துறையில் ஒரு குறிப்பிடத்தக்க நிகழ்வாகும். கணிப்பொறிக்கல்வி இன்று தமிழகமெங்கும் பரவி இருப்பதால், அது தொடர்பான நூல்களும், கட்டுரைகளும், இதழ்களும், அகராதிகளும் தொடர்ந்து வெளிந்து கொண்டிருக்கின்றன. ஆனால், 5 ஆண்டுகளுக்குமுன் இத்துறையில் வெளிவந்த நூல்கள் குறைவு. எனவே, கல்வியின் பரப்பும் பயனும்தான் தேவையான நூல்கள் வெளிவரக் காரணமாகின்றன. மாதம் ஒருமுறை வெளிவந்த 'தமிழ் கம்ப்யூட்டர்' என்ற இதழ் தற்போது மாதம் இருமுறை வெளிவருகிறது. விரைவில் வாரம் ஒருமுறை வரும் வாய்ப்பும் உண்டு. அந்த இதழிலும் கருத்துக்களை ஆங்கிலக் கலைச்சொற்கள் மூலமே விளக்கினும், மெல்ல மெல்லத் தமிழ்க் கலைச்சொற்களும் அறிமுகப்படுத்தப் படுகின்றன. தினமணி தீபாவளி மலரில் (1996 நவம்பர்) இண்டர்நெட் பற்றி எளிய முறையில் எழுதப்பட்ட கட்டுரை எல்லாராலும் வரவேற்கப்பட்டது. இண்டர்நெட், இ.மெயில்,

டெல்நெட் ஆகியன அதில் வலை, மின்வழிஅஞ்சல், தொலைவழியணுகல் எனத்தமிழாக்கப்பட்டு உள்ளன. இவ்வாறு உருவாக்கப்படும் கலைச்சொற்களைத் திரட்டி, தரப்படுத்தி, அகராதியாக வெளியிடும்போது கலைச்சொல் பயன்பாட்டில் சீர்மை ஏற்படும்.

தொழிற்கல்வி என்றுவரும்போது, மருத்துவத்துக்கு ஒரு சிறப்பிடம் உண்டு. மனிதன் தோன்றிய நாள்தொட்டு அவனிடம் ஒருவகை மருத்துவ அறிவு இருந்து வருகிறது. மருத்துவம் வளர்ந்து, பல பிரிவுகளாகப் பிரிந்துள்ள இன்றைய நிலையில், அவற்றை முறைப்படக் கற்பிப்பது தேவை. அதற்கான பாடநூல்கள், நோக்குநூல்கள் தமிழில் உருவாகின்றன. மருத்துவ கலைச்சொல் பட்டியல்களும், அகராதிகளும் வெளிவந்து கொண்டிருக்கின்றன. முதலிரண்டாண்டு மருத்துவப்படிப்பு மாணவர்களுக்கான பாடநூல்களைத் தமிழ்ப் பல்கலைக்கழகம் தயாரித்துள்ளது. பொதுமக்களுக்கான மருத்துவ நூல்கள் நிறைய வெளிவருகின்றன. மருத்துவ இதழ்களும் வெளிவருகின்றன 'ஹெல்த்' என்கிற மருத்துவ மாத இதழ் ஆயிரக்கணக்கில் விற்பனையாகின்றது. இந்த இதழ்கள் மருத்துவக் கருத்து அமைவுகளை எளிதாக விளக்குவதோடு, புதிதுபுதிதாகக் கலைச்சொற்களையும் உருவாக்குகின்றன.

### ஹெல்த் நவம்பர் 96 இதழில் காணப்படும் சில கலைச்சொற்கள்: -

| | | |
|---|---|---|
| Heart Failure | : | இதயச் செயலிழப்பு |
| Dyspnoea | : | மூச்சிரைத்தல் |
| Orthepnoea | : | படுக்கை மூச்சிரைப்பு |
| Gastritis | : | இரைப்பை அழற்சி |
| Multi-nodular goitre | : | பலமுடிச்சுகழலை |
| Cerebral palsy | : | மூளைச் செயல் இழப்பு |
| Short wavediathermy | : | வெப்பச் சிகிச்சை |
| Inter ferential therapy | : | மாற்றொளிச் சிகிச்சை |
| Ultra sound massage | : | மிகுஒலி ஒத்தடச் சிகிச்சை |

| | | |
|---|---|---|
| Wax bath | : | மெழுகு பூச்சு சிகிச்சை |
| Sympathetic nerves | : | பரிவு நரம்புகள் |
| Otitis media | : | நடுச் செவியழற்சி |
| Conjunctivitis | : | விழிவெண்படல அழற்சி. |

இவைபோல இன்னும் பல கலைச்சொற்களை மருத்துவ இதழ்களிலிருந்து தொகுக்க முடியும். எனவே, தமிழில் கலைச்சொல் இல்லை என்பது முழுமையாக ஏற்றுக்கொள்ளக் கூடிய ஒரு கூற்றல்ல. தேவைப்பட்டால், கலைச்சொல் கிடைக்கும் என்பதையே மேலே உள்ள சான்றுகள் மெய்ப்பிக்கின்றன.

தமிழ்வழி அனைத்து நிலைகளிலும் கல்வி கற்பிக்கப்படும்போது, நூல்களும் இதழ்களும் பெருகும், கலைச்சொற்கள் குவியும், அறிவியல் தமிழும் வளம்பெறும். அறிவியல் தமிழ் வளர்ச்சியில் 'பழையன கழிதலும் புதியன புகுதலும்' இயல்பாகும். இது காலத்தின் தேவை. தொல்காப்பியர் அறியாத யவனர், யூபம், ஞமலி முதலியன சங்கப்புலவர்களின் ஆக்கமாகும். இவ்வாறான சில புது நுழைவுகள், அவற்றுக்கான விதிகள் வளரும் மொழியில் தவிர்க்க இயலாதவையாகும். தேவைப்படும்போது, ஷ, ஸ, ஜ, ஹ முதலிய கிரந்த எழுத்துக்களையும் பயன்படுத்தவேண்டும். க்., ச், ட், த், ப் என மொழிக்கு இறுதியில் வராத எழுத்துக்களையும் வேண்டிய வேண்டியாங்கு எடுத்தாளல் தவறில்லை. மாக்னைசம், நைட்ரேட், ஸ்டெத்தாஸ்கோப் - இன்று வழக்கில் வந்துவிட்டன. இவ்வகை மாற்றங்களை மொழியின் வளர்ச்சியாகக்கருதிப் பயன்படுத்தவேண்டும்.

**இறுதியாக. தமிழ்மூலம் தொழிற்கல்வி வெற்றிபெற நாம் செய்ய வேண்டியது. 'தமிழே பயிற்றுமொழி' என்கிற கொள்கை அறிவிப்பும் செயல் பாடும்தான். தேவை ஏற்பட்டால் பொருள்கள் கிடைக்கும். அதைப்போல, 'தமிழ் வழிக்கல்வி' என்றால் நூல்களும், இதழ்களும், அகராதிகளும் வந்து குவியும் என்பதில் ஐயமில்லை. அதற்கு, இன்று, சிறிய அளவிலேனும் வெளிவந்து கொண்டிருக்கும் நூல்களும், அகராதிகளும், இதழ்களுமே சான்று.**

# மதுரையும் நாடகக் கலையும்

*அ. சிவக்கண்ணன்*

"தமிழர்கள் நாடகத்தில் முங்கி முழுகினவர்களாகத்தெரிகிறது. சாமான்யமாக இப்போது வழங்கி வருகிற கோவை, பிரபந்தங்களைப் பார்த்தால், எல்லாச்செய்யுள்களும் நாடகத்துறைகளாகவே இருக்கும். கலம்பகத்தைப் பார்த்தாலும் அநேகமாக நாடகச் செய்யுள்கள்தான். அவ்வளவு ஆசை நாடகத்தில் நம்மவருக்கு என்று ரசிகமணி டி.கே.சி. குறிப்பிடுவது சிந்திப்பதற்குரிய கருத்து. ரசிகமணிக்கு மிகவும் பிடித்த கம்பராமாயணத்திற்குக் கூட 'கம்பநாடகம்' என்றோருபெயர் உண்டு. பண்டைத் தமிழர்கள் தமிழையே இயல், இசை, நாடகம் என்று பிரித்துள்ளமை, நாடகக்கலை தமிழர் வாழ்க்கையிலிருந்து பிரிக்க முடியாத ஒரு கலையாக இருந்திருப்பதை உணர்த்துகிறது.

பத்துப்பாட்டும், எட்டுத்தொகையும் கூத்துக் கலையின் சிறப்பினைப் பறைசாற்றும். கலைப்பெட்டகமான சிலப்பதிகாரம் குன்றக்கூத்து, குரவைக் கூத்து எனப் பலவகைக் கூத்துக்களின் வகையினை எடுத்தியம்பும். கூத்தர், பாணர், விறலியர், வயிரியர் எனப்பலவகைக் கூத்துக் கலைஞர்களைப் பற்றிச் சங்க இலக்கிய வாயிலாக அறியமுடிகிறது.

மேற்கூறிய கலை பற்றிய செய்திகளின் வாயிலாக மற்றொரு உண்மையும் தெரியவருகிறது. அதுதான் மூதூர் மதுரைக்கும் கலைகளுக்கும் உள்ள தொடர்பு. சங்கம் வைத்துத் தமிழாய்ந்த பெருமையுடையது மதுரை மாநகரம் என்பது யாவரும் அறிந்த உண்மை. எனவே மதுரைத் தமிழும் தனிப்பெருமை வாய்ந்தது என்கிறார் பேராசிரியர் வையாபுரிப்பிள்ளை.

"... அங்கே தோன்றிய நூல்களின் தமிழே பொது அங்கீகாரத்திற்கு உரியது எனக்கொள்ளப்பட்டது. மற்றைப் பிரதேசங்களிலுள்ள புலவர்களும் இம்மதுரைத் தமிழைப் பின்பற்றியே பாடினர். ஆகவே மதுரைப் பிரதேசத்துத் தமிழே 'செந்தமிழ்' (Standard Tamil) ஆயிற்று."

*"தமிழ் நிலை பெற்ற தாங்கருமரபின்*
*மகிழ் நனை மறுகின் மதுரை"*
என்றுரைக்கும் சிறுபாணாற்றுப்படை.

எவ்வளவு சிறப்பு வாய்ந்த இலக்கியமானாலும் அதுமதுரையில் அரங்கேற்றப்பட்டு மதுரைப்புலவர்களின் ஒப்புதலையும் பாராட்டுதலையும் பெற்றாலே, முத்திரை பெற்ற இலக்கியமாகத் தமிழ் மாநிலமெங்கும் வரவேற்பினைப் பெறும் என்பது ஒரு மரபாக இருந்து வந்திருக்கிறது. அதுபோலவே கலைஞர்களும் மதுரைவாழ் மக்களின் பாராட்டுதலைப் பெறுவதை ஒரு சிறப்பம்சமாக ஏற்றுக்கொண்டிருக்கின்றனர்.

நடனத்திற்கு அரசனான இறைவனே, கால் மாறிஆடிய சிறப்பினைப் பெற்ற இடம் மதுரை என்று புராணங்கள் கூறும். அறுபத்து நான்கு திருவிளையாடல்களை இறைவன் புரிந்த இடமல்லவா? தொன்று தொட்டு, கலைகளின் விளைநிலமாக, விமர்சன மையமாக மதுரை விளங்கியது, என்பது வரலாற்று உண்மையும் கூட.

கோவலன் மதுரையில் கொலைப்பட்டதற்குக் கூட, அந்தக் கலையே காரணமாக இருந்ததை சிலப்பதிகாரம் பேசும்.

*"கூடன் மகளிர் ஆடல்தோற்றமும்*
*பாடற்பகுதியும் பண்ணின் பயங்களும்*
*காவலன் உள்ளம் கவர்ந்தன' என்று, தன்*
*ஊடல் உள்ளம் உள் கரந்து ஒளித்து*
*தலைநோய் வருத்தம் தன்மேல் இட்டு*
*குலமுதல் தேவி கூடாது ஏக"*

கொலைக் களக்காதை (131 - 136)

பாண்டியன் நெடுஞ்செழியன், அவைக்களத்தில் நிகழ்ந்த நாட்டிய நிகழ்ச்சியை சற்று அதிகமாகவே கூர்ந்து நோக்குவதைக் கண்ணுற்ற பாண்டிமாதேவி கோபமுற்று அந்தப்புரம் செல்வதை அறிந்தவுடன் அவள் ஊடல் தணிக்கும் பொருட்டு அவளைப் பின்பற்றி மன்னன் விரைந்து செல்லும் வேளையில், பொற்கொல்லன் மறித்து, சிலம்பைத் திருடியவன் கிடைத்து விட்டான் என்று சொல்லியதால் அல்லவோ, அரசனும் ஆராயாது

"தாழ்பூங்கோதை தன் காற்சிலம்பு
கன்றிய கள்வன் கையது ஆகின்
கொன்று, அச்சிலம்பு கொணர்க ஈங்கு"

கொலைக் களக்காதை 150 -153

என்று, அக்கள்வனைக் கொன்று, சிலம்பினைக் கொண்டுவரப்பணித்தான். மதுரையில், ஒரு நல்ல கலைஞனும் கலைஆர்வலனுமான கோவலன் கொலைப்பட, கலையே காரணமாய் அமைந்தது ஒரு விந்தையே!

மேற்கூறிய செய்திகளின் பின்னணியில், தற்கால மேடை நாடகங்களுக்கு உள்ள தொடர்பைக் காணலாம்.

முன்பெல்லாம் வைகுண்ட ஏகாதேசி போன்ற கண்விழிக்கிற விழாக்காலங்களிலே, மதுரையில் தெருவுக்குத்தெரு, வள்ளி திருமணம், பவளக்கொடி, அல்லி அர்ச்சுனா, அரிச்சந்திரா, நல்லதங்காள், என்று, நாடகங்கள் நிகழ்ந்த வண்ணம் இருக்கும். அதேபோன்று, ஒவ்வோர் தெருவில் நடக்கும் காளியம்மன், மாரியம்மன் விழாக்களின் போதும் மேற்கூறிய நாடகங்கள் அரங்கேறுவது வழக்கம். இப்போது அவையெல்லாம் குறைந்து விட்டன. மாறாக, நாடகங்களின் இடத்தை, திரைப்படக் காட்சிகள் பிடித்துக் கொண்டன.

நாடகக்கலை, மிகுந்த வரவேற்பைப் பெற்றிருந்த காலத்தில், பெரும்பாலான நாடகக்குழுக்கள் 'மதுரை' என்ற முதல் வார்த்தையோடு தங்கள் குழுக்களுக்குப் பெயர் சூட்டி வந்தனர்.

மதுரை பாலமீனா ரஞ்சனி சங்கீத சபா, மதுரை பால வினோத சங்கீத சபா, மதுரை தேவிபால விநோத சங்கீத சபை, மதுரை தத்துவ மீனலோசனி வித்துவ பால சபை, போன்றவை சில எடுத்துக் காட்டுகள்.

சிறந்த புலமையெனில் அதனைப் பாராட்டத் தவறமாட்டார்கள், மதுரை, ரசிகர்கள். பின்வரும் நிகழ்ச்சி அதனை உறுதிப்படுத்துகிறது.

சங்கரதாஸ் சுவாமிகள் கோவலன் நாடகத்தை மதுரையில் அரங்கேற்றிய போது நடந்த நிகழ்ச்சி இது.

கோவலன், கண்ணகியிடம் அவளுடைய கால்சிலம்பை,

மதுரையில் கொண்டுபோய் விற்றுப் பொருள்பெற்று வருவதாகச் சொல்கிறான். ஆனால் கண்ணகி, கோவலனிடம்,

*“மாபாவியோர் கூடி*
*வாழும் மதுரைக்கு*
*மன்னா போகாதீர் இன்று”*

என்று பாடுகிறாள்.

இந்தக் காட்சியைப் பார்த்துக் கொண்டிருந்த மதுரை ரசிகர்களுக்குத் தாங்கமுடியாத கோபம். “எங்கே சங்கரதாஸ்? கொண்டுவா.. மேடைக்கு” என்று ஆர்ப்பாட்டம் செய்து, அவரைமன்னிப்புக் கேட்கும்படி வற்புறுத்தினார்கள்.

சுவாமிகள் மேடைக்கு வந்து ரசிகர்களை அமைதிப்படுத்தி விட்டு, “‘மா’ என்ற சொல் திருமகளாகிய இலக்குமியையும், ‘பா’ என்ற சொல் கலைமகளாகிய பாரதியையும், ‘வி’ என்றசொல் மலைமகளாகிய பார்வதியையும் குறிக்கிறது என்றும், அதற்குச் சான்றாக பரஞ்சோதி முனிவரின் திருவிளையாடல் புராணத்திலிருந்து சான்றுகளையும் காட்டிவிளக்கினார். சகல செல்வங்களும் நிறைந்து விளங்கும் மதுரையம்பதியில் இந்தச் சிலம்பை வாங்குவோர் கிடையாது என்ற பொருளில்தான், ‘மாபாவியோர் கூடி வாழும் மதுரை’ என்று எழுதினேன் என்று விளக்கியவுடன் ரசிகர்கள் கைதட்டிப் பாராட்டியிருக்கிறார்கள். முன்வரிசையிலிருந்த ஒரு ரசிகர் எழுந்து, “சுவாமிகளே! நீர் எந்தக்கருத்திலே எழுதியிருந்தாலும் சரி; உமது புலமைக்குத் தலைவணங்குகிறோம்” என்று சொல்லி சுவாமிகளைப் பெருமைப் படுத்தியிருக்கிறார்.

ஐயப்ப வழிபாட்டைத் தமிழ்நாடெங்கும் பரப்பிய ஒரு நாடகக் கலைஞர் மதுரையைத்தான் களமாகத் தேர்ந்தெடுத்தார். அவர் மிகச்சிறந்த நாடகக்கலைஞரான, நவாப் ராஜமாணிக்கம். மதுரை பால மீனரஞ்சனி சங்கீத சபாவிலே நடிகராகச் சேர்ந்த இவர், அதன் பொருளாளராகி, பிறகுஅந்தச் சபாவின் பொறுப்பாளருமானார். பிறகு, மதுரைபால வினோத சங்கீத சபா என்ற பெயரில் ஒரு நாடகக் குழுவைத் தொடங்கினார். அதன்பின்னர் 1933இல் மதுரை தேவிபால விநோத சங்கீத சபையைத் தோற்றுவித்தார். சங்கரதாஸ் சுவாமிகள் குழுவைப் போலவே, இவருடைய குழுவிலும் முற்றிலும் சிறுவர்களும்

ஆண்களுமே நடித்தார்கள். இவர் புராண நாடகங்களையே அதிகமாக அரங்கேற்றினாலும், 'இன்பசாகரன்' என்கிற தேசிய நாடகத்தையும், பங்கிம் சந்திர சட்டர்ஜியின் 'துர்கேச நந்தினி' நாவலை 'பிரேம குமாரி' என்கிற பெயரிலும் அரங்கேற்றியுள்ளார்.

இவருடைய கிருஷ்ணலீலா நாடகம் 1500 முறையும் இராமாயணம் 1000 முறையும் ஐயப்பன் 1400 முறையும், ஏசுநாதர் 1300 முறையும், பக்தராம்தாஸ் 600 முறையும் மேடையேறி யிருக்கின்றன. இவருடைய நாடகங்களில் வரும் தந்திரக் காட்சிகள், பார்வையாளர்களை பிரமிக்க வைக்கும்.

பிற்காலத்தில் நடிகர் ஆர்.எஸ். மனோகர், நவாப் ராஜமாணிக்கத்திடமிருந்த மேடைக் காட்சிப் பொருட்களை யெல்லாம் வாங்கி, தம்முடைய இலங்கேஸ்வரன் விசுவாமித்திரர் போன்ற நாடகங்களில் பயன்படுத்தினார்.

பொதுவாக ஒரு நாடகக்குழு நன்றாக வளர்ந்து பெரிதான பிறகு ஏதாவது ஒரு காரணத்தால் சற்று தொய்வடையும். பிறகு அதிலேயிருந்து மற்றொரு நாடகக்குழு உருவாகும். மதுரையில் அப்படி நடந்திருக்கிறது. நவாப்ராஜமாணிக்கம் குழுவிலேயிருந்து பிரிந்து, டி.கே.கிருஷ்ணசாமி, சக்தி நாடக சபாவைத் தொடங்கினார். எஸ்.டி.சுந்தரம் எழுதிய 'கவியின் கனவு' நாடகத்தை மதுரையில் சிலகாலம் நடத்தினார்கள். இதில் நடித்த நடிகர்களெல்லாம் பிற்காலத்தில் புகழ்பெற்ற நடிகர்களானார்கள். சிவாஜி பட்டம் பெற்றிராத, வி.சி.கணேசன், கவியாகவும், ராஜகுருவாக எம்.என்.நம்பியாரும் நடித்தார்கள். அதன் பிறகு, திரைப்பட நடிகராகப் புகழ்பெற்று, சிவாஜி கணேசன், 'வீரபாண்டிய கட்டபொம்மன்' நாடகத்தை மதுரையில் நடத்தி மிகுந்த பாராட்டுக்களைப் பெற்றார்.

சங்கரதாஸ் சுவாமிகளுடைய நாடகக்குழு மதுரையை மையமாகக் கொண்டு இயங்கிய போது, அவரிடம் நடிகராய்ப் பயிற்சி பெற்றவர் கண்ணுசாமி. இவருடைய புதல்வர்கள்தான், தி.க.சங்கரன், தி.க.முத்துசாமி, தி.க.சண்முகம், தி.க.பகவதி. இவர்களும் மதுரையில் சுவாமிகளுடைய மதுரை தத்துவ மீனலோசனி வித்துவ பால சபையில் நடித்தவர்கள்தான்.

சுவாமிகள் இறந்த பிறகு சகோதரர்கள் நால்வரும், மதுரை ஸ்ரீ பால சண்முகானந்த சபா என்ற பெயரில் ஒரு புது நாடகக்குழுவைத் தொடங்கினார்கள். சுவாமிகள் அரங்கேற்றிய *சாவித்திரி, சதிஅனுசூயா, காலவரிஷி, அரிச்சந்திரா,* சுலோசனாசதி, வீரஅபிமன்யு, பவளக்கொடி, கோவலன், எனப்பல நாடகங்களை அரங்கேற்றினர். மதுரையில் நாடகக்கலைஞர்களாக மலர்ந்த இவர்கள், பின்னர் தொடர்ந்து மனோகரா, வீரசிவாஜி, கள்வனின் காதலி, ராஜராஜசோழன், மேனகை, அந்தமான் கைதி, *சிவகாமியின் சபதம்* போன்ற புகழ் பெற்ற பல நாடகங்களை அரங்கேற்றினர். இவை மதுரையிலும் வரவேற்பைப் பெற்றன. குழந்தைகளுக்கான நாடகங்களாக, அப்பாவின் ஆசை, பலாப்பழம் போன்றவற்றையும் அரங்கேற்றினார்கள். நடிகர் கமலஹாசன், குழந்தை நட்சத்திரமாகப் பயிற்சிபெற்றதும், இந்த நாடகங்களில்தான்.

திரைப்படநடிகர் டி.ஆர்.மகாலிங்கம் மதுரை அருகே உள்ள சோழவந்தான் ஊரைச்சேர்ந்தவர். இவரும் சிறுவயதில் ஜகன்னாத அய்யர் நாடகக்குழுவில் நடித்து வளர்ந்தவர். நடிகர் எம்.ஆர்.ராதா வும் இவரோடு இதே குழுவில் இருந்தவர்தான்.

டி.ஆர்.மகாலிங்கம் தனித்தன்மை வாய்ந்த குரலுக்குச் சொந்தக்காரர். மதுரையைச் சுற்றி, 'வள்ளி திருமணம்' போன்ற ஸ்பெஷல் நாடகங்களை நடத்தியவர்.

எம்.ஆர். ராதா மதுரையில் ராமாயணத்துக்கு எதிராக, '*கீமாயணம்*' நாடகத்தை நடத்த முயன்று, மிகுந்த எதிர்ப்புக்களுக்கும், கலவரத்துக்கும் இடையே அரங்கேற்றினார். மதுரை அருகே சக்குடி துரைராஜ் அரிச்சந்திரா நாடகம் தென்பாண்டி நாட்டில் பெரும் புகழ் நாட்டியது.

அதேபோன்று, நடிகர் உடையப்பா மதுரை நகரின் மறக்கமுடியாத நடிகர். பட்டிதொட்டியெல்லாம் அவருடைய '*அரிச்சந்திரா*' புகழ் கொடிகட்டிப் பறந்தது.

பொதும்புமுருகன் என்ற பெயரில் ஒரு நடிகர் பூலித்தேவன் நாடகத்தை விடாது நடத்திவந்தார். இவரே பிற்காலத்தில் திரைப்படங்களில் புகழ் பெற்று '*சங்கிலி முருகன்*' என்று அறியப்பட்டார்.

*கொக்கு பறக்குதடி பாப்பா*
*தேம்ஸ் நதிக்கரையின் கொக்கு - அது*
*தின்ன உணவில்லாது வந்த கொக்கு - ரண*
*மாம்ச வெறிபிடித்த கொக்கு - நம்மை*
*மயக்கித் திரியுதடி பாப்பா..*

இந்தப் பாடலை, நாடகத்தில், முருகன் வேடம் தாங்கி, கையில் வேலுடன் விடுதலை கீதம் பாடி, தமிழ் நாடெங்கும் வலம் வந்தவர் விசுவநாததாஸ் எனும் நாடக நடிகர். இவர் மதுரை அருகே உள்ள திருமங்கலம் எனும் ஊரைச் சேர்ந்தவர். ஆங்கில அரசால், 'கொக்குபறக்குதடி' பாட்டுக்காகவே சிறைப்படுத்தப் பட்டு, ஓராண்டு தண்டனையனுபவித்தவர். இருந்தும், நாடகமேடையில், முருக வேடத்தோடு, உடல்நலமில்லாததால், மயில்மீது உட்கார்ந்து கொண்டே,

'கொக்குபறக்குதடி' பாட்டைப்பாடிய வண்ணமே உயிரை விட்டவர். இவரைச் சிறைப்படுத்த வந்த ஆங்கில ஆட்சியாளரின் காவலர்களுக்கு முந்தியவனாய், காலன் கவர்ந்து சென்றுவிட்டான்.

மதுரையம்பதி சங்ககாலந்தொட்டே கலைக்கு விளைநிலமாக இருந்து வந்திருப்பதை அறியமுடிகிறது.

இப்போது மதுரையில் நாடகக்கலை எந்த நிலையில் இருக்கிறது என்ற நினைப்பும் வரவே செய்யும். சில ஆண்டுகளுக்கு முன்புவரை பயில்முறை நாடக்குழுக்கள் மதுரையில் பல இயங்கிவந்தன. இப்போது அந்தப் பயில்முறை நாடகக்குழுக்கள் கூட இல்லை. தொழில்முறை நாடகக் குழுக்கள் மதுரையில் முன்பு போல், ஏகாதசி போன்ற நாட்களில் கூட நாடகங்களை அரங்கேற்றுவதில்லை. பள்ளி, கல்லூரிகளில் கூட ஆண்டுவிழா, நாடகப்போட்டி போன்றவை அருகிக் கொண்டு வருகின்றன.

நிஜ நாடக இயக்கம் போன்ற புதுமுறை நாடகக்குழு ஒன்றிரண்டு எப்போதாவது நாடகங்களை மக்கள் பார்வைக்குக் கொண்டுவருகின்றன.

**முன்னாள் மதுரையில் நடந்த நாடகங்களை இப்போதுள்ள மதுரையோடு ஒப்பிடும்போது வேதனையே எஞ்சுகிறது.**

# திருவெம்பாவை கண்ணுக்கினியான்

## 4 - ஆம் பாடல்

அருளியல் அனுபவம் பெறுவோர், தம் இறையனுபவங்களைக் காதல் மொழியில் வெளியிடுவது உண்டு என்று அருளியல் (Mysticism) பற்றிய திறனாய்வாளர் கூறுவர் மாணிக்கவாசகர் திருவெம்பாவையில் கூறுவனவற்றை இவ்வகையினவாகக் கருதலாம்.

திருவெம்பாவைப் பாடல்களின் காதல் மொழி, மாணிக்கவாசகர் தம் அனுபவத்தை, ஒரு பெண்ணின் மீது ஏற்றிக் கூறுவன. தூக்கத்திலிருந்து எழுப்பப்படும் பெண்ணும் எழுப்பும் பெண்களும் ஒத்த பருவத்தைச் சேர்ந்தவர் அல்லர். இறைவனிடம் அவர்கள் செலுத்தும் அன்பும் ஒத்த தன்மையும் தரமும் கொண்டதன்று. ஆதலால் துயில் எழுப்பும்போது நடக்கும் மகளிரின் உரையாடல், அவரவர் பருவத்திற்கும் பக்குவத்திற்கும் தகுந்தவாறு வெவ்வேறு வகையாக நடைபெறுகிறது.

அந்த மகளிருள் தலைமை வாய்ந்தோர், இறைவனிடம் மிகுந்த காதல் கொண்டோர் ஆவர். அதுமட்டும் அல்ல; தம் தோழிமாரிடமும் அன்பு கொண்டோர். அனைவரும் இறைவனிடம் தாழாத அன்பு வைத்துத் தண்ணருளைப் பெறவேண்டும் என்று எண்ணும் கருணை உடையோர். அவர்கள் காட்டும் அன்பினால், பேதைப் பருவத்து மகளிர் பலரும் பாவைநோன்புக் கூட்டத்தில் சேர்ந்து, வைகறையில் எழுந்து, நீராடி, கோவிலுக்குச் சென்று வழிபட்டனர். அவர்களுள் ஒருத்தியை, மகளிர் கூட்டம் துயில் எழுப்பும் நிகழ்ச்சி, இப்பாடலில் இடம் பெறுகின்றது.

அவள் சிறுமி; அறியாப் பருவத்தாள். அவள் சிரிக்கும்போது, பல்வரிசை வெளேலென, முத்துப்போல் விளங்கும். அதனாலேயே மற்ற பெண்களுக்கு அவளிடம் ஈடுபாடு! ஆதலால் அவளைத் துயிலெழுப்பும் போது, "ஒன் நித்தில நகையாய்" - 'ஒலி பொருந்திய முத்தைப் போன்ற பல்வரிசை உடையவளே' என்று அழைக்கின்றனர். முத்தை 'ஒண்

நித்திலம்' என்று சிறப்பிப்பதால், அவளது பல்வரிசை இன்னும் முதிர்ந்து வெண்மை பெறவேண்டும்; அவ்வளவு இளம் பருவத்தாள் என்பது விளங்கும்.

இருள்நீங்கும் வைகறைப்போதில், இறைவனை வணங்கச் செல்ல வேண்டிய கடமை தெரிந்திருந்தும், கண்மூடி உறங்குகின்ற அவளை, அவளது பேதைத்தன்மை தோன்ற அழைத்து, எழுப்பி, 'பெண்ணே, வைகறை வந்ததை நீ உணரவில்லையா' என்னும் பொருள் அமைய,

"இன்னம் புலர்ந்தின்றே?" என்று வினாவுகின்றனர்.

'புலர் காலையில் எங்களுடன் வருவதாக நேற்றுக் கூறினாய். இன்றோ, உறங்குகின்றாய்: பொழுது புலர்ந்துவிட்டதே: உலகைக் கவிந்த இருளும் உயிரைக் கவிந்த ஆணவ இருளும் புலர்ந்துவிட்டனவே: அதை அறியாயோ?' என்பது இந்த வினாவின் கருத்து.

உள்ளே படுக்கையில், அனந்தலில் இருக்கும் பேதை, அவர்களின் அழைப்பில் இருக்கும் அன்பை உணர்ந்தாள். அவர்களின் வினாவையும் கேட்டாள். ஆயினும் எழுந்திருக்க அவளுக்கு மனமில்லை. இன்னும் சற்று உறங்கலாமே என்று எண்ணினாள். எதையாவது சொல்லித் தட்டிக் கழித்துவிட்டு, உறங்கலாம் என்று முடிவுசெய்து கொண்டு, அவர்கள் அழைப்பில் சற்றுக் கடுமை இருப்பதை.

"வண்ணக் கிளிமொழியார் எல்லாரும் வந்தாரோ?"

என்று எதிர்க்கேள்வி தொடுக்கின்றாள். 'நீங்கள் இனியமொழியால் அழைப்பது தெரிகிறது என்று குத்திக்காட்டி என்னை ஒத்த சிறுமியர்கள்-கிளிபோலப் பேசுபவர்கள் எல்லோரும் வந்துவிட்டார்களா?' என்று கேட்கின்றாள். எல்லோரும் எங்கே வந்திருக்கப்போகிறார்கள் என்று ஒரு அசட்டுத்துணிவு அவளுக்கு. அவர்களை எண்ணிச் சொல்லுக. எண்ணிக்கை குறையத்தான் போகிறது. 'எல்லோரும் வராதபோது என்னை மட்டும் எழுப்புவானேன்' என்று சொல்லிவிட்டுத் தூங்கலாம் என்பது அவள் கருத்து. அவள் நாட்டம் இறைவனிடம் செல்லுவதை விட, கிளிபோலப் பேசும்

தன் பருவத்து மகளிரிடமே சென்றது என்பது, 'வண்ணக்கிளி மொழியார்' என்ற அடைமொழியால் விளங்கும். இது உலகியல்.

அவளை எழுப்பும் பெண்களோ இறையியலில் ஊன்றி நிற்கின்றனர். அதேசமயம் அவளது தந்திரத்தையும் உணர்ந்து கொள்கின்றனர். சிறுமியே, இதைக் காரணமாகக் காட்டி, இன்னும் உறங்கிக் காலத்தை வீண்போக்காதே. குறும்புக்காரியே, உன் எண்ணம் எங்களுக்குப் புரியாதா? உன் தந்திரத்தால் ஏமாறப்போவது யாங்களா? அல்ல. உன் நேரந்தான் உறக்கத்தால், இறைவனைப் பாடாத நேரமாகி, வீணாக கழியப் போகிறது: சிறுமியர் எல்லாரும் வந்திருக்கின்றனரா என்று சிறிது நேரத்தில் கூறமுடியாது என்று நினைக்கின்றாயா? கூறமுடியும். அந்த நேரத்தில் நீ உறங்கி நேரத்தை வீணடிப்பாய்:

*"எண்ணிக் கொடு உள்ளவா சொல்லுகோம் அவ்வளவும்*
*கண்ணைத் துயின்று அவமே காலத்தைப் போக்காதே"*

எழுந்துவா; எங்களுடன் சேர்ந்துகொள். எங்கள் மனம், எண்ணிக்கணக்குப் போடும் நிலையில் இப்பொழுது இல்லை. இறைவனின் திருப்பெயர்கள் வரும் பாடல்களைப் பாடிய வண்ணமே உன் வாயிலில் வந்து நின்றோம். பாடுவதை நிறுத்தி வேறு செயலில் இறங்க, எங்களால் ஆகாதம்மா!

எங்களைக் காதலியராய் ஏற்றுக்கொண்ட இறைவன் மண்ணுலகிற்கும் விண்ணுலகிற்கும் தலைவன். விண்ணுலகில் வாழும் தேவர்கள் இன்பமே நுகர்வோர். மேலும் இன்ப வாழ்வுப் பெருக்கத்தைப் பெறவேண்டி, அமுதம் உண்ண விரும்பிப் பாற்கடலைக் கடைந்தனர். அப்போது வெளிப்பட்ட ஆலகால நஞ்சிற்கு அஞ்சிச் சிவபெருமானைச் சரணம் அடைந்தனர். அவன் நஞ்சைப் பருகி, அவர்களைக் காப்பாற்றினான். ஆதலால் அவன் "விண்ணுக்கு ஒரு மருந்து" போன்றவன். அமுதம் உண்ட தேவர்கள், மேலும் வாழ்வு வேண்டி அவனையே வாழ்த்துகின்றனர். ஆதலால் அவனே தேவதேவன். அவனே அவர்களுக்கு ஒப்பற்ற அமுதம் ஆவான். அவனே வேதங்கள் உரைக்கும் பொருள். தேவர்களுக்கும் வேதங்களுக்கும் வெளிப்படக் காணமுடியாமல், ஒளிப்பாட்டம் காட்டுகின்ற சிவபெருமான், எங்கள் காதலுக்கு வசப்பட்டு எங்கள் முன்

வந்தான். அவன் திருமேனி அழகை யாம் கண்குளிரக் கண்டோம். "எங்கள் கண்ணுக்கு இனியனாய்" நின்றான். அவனைத் தழுவி மகிழ்ந்தோம்.

"அவனை எண்ண எண்ண, அவனைப் பாடப்பாட, எம் உள்ளம் வேறு நிலையின்றி அவன் நினைவாய் கனிகிறது; கசிந்து உருகுகின்றது. பாகாய்க் கரைகிறது. இந்நிலையில், சிறுமியர்களை எண்ணிக்கணக்கிட எம்மால் ஆகாது. நீயே வந்து எண்ணிக்கொள்: குறைந்தால், மறுபடி போய் உறங்கு" என்று கூறுகின்றனர்.

*"விண்ணுக்கு ஒரு மருந்தை, வேத விழுப்பொருளைக்*
*கண்ணுக்கு இனியானைப் பாடிக் கசிந்து உள்ளம்*
*உள்நெக்கு நின்று உருக, யாம் மாட்டோம்-நீயே வந்து*
*எண்ணி, குறையின், துயில் ஏலோர் எம்பாவாய்."*

என்று கூறுகின்றனர். எந்நேரமும் காதலனின் நினைவிலேயே வாழும் மகளிரின் முல்லைத்திணை ஒழுக்கம் இங்கு விளங்குகின்றது. யாவர்க்கும் மேலான பரம்பொருள்-யாவைக்கும் அப்பால், உணர்வைக் கடந்து விளங்கும் இறைவன்-தங்களிடம் பெருங்கருணை வைத்துக் காட்சி வழங்கிய எளிமையை நினைத்து இந்த மகளிர் உருகுகின்றனர். அவனைத் தழுவி மகிழ்ந்ததை எண்ணி, அவனது நினைவில் தம்மை இழந்து நிற்கின்றனர். அவர்கள் கருத்தெல்லாம் கடவுளுக்கே. சொல்லெல்லாம் அந்தச் சுந்தரனுக்கே. செயல் எல்லாம் அந்தச் செம்-பொருளுக்கே. இந்த உயர்நிலையை-அருளியலை-விட்டுக் கேவலம் எண்ணிக் கணக்குப்போடும் உலகியலுக்கு இறங்க அவர்கள் உளங்கொள்ளாததில் வியப்பென்ன?

உறங்குபவளின் உலகியல் விருப்பத்தையும், தமது இறையியல் நலத்தையும் ஒருங்கே எடுத்துக்காட்டும் தோழிமாரின் கருத்து, உறங்குபவளும் இறைவனிடம் விருப்பம் கொண்டு, அவனை வழிபட வேண்டும் என்று உணர்த்துவதே ஆகும்.

# ஆழ்வார்கள் கையாளும் எதார்த்த உவமைகள்

*முனைவர் க. விஜயன்,*

## முன்னுரை

ஒரு இலக்கியப் படைப்பின் உள்ளடக்கத்தைச் சிறப்புச் செய்வதற்கு கையாளப்படுவதே உவமை என்ற இலக்கிய உத்தியாகும் என்று சான்றோர்கள் குறிப்பிட்டாலும், இதற்காக மட்டுமா கையாளப்படுகிறது என்றால் இல்லை என்றுதான் கூறமுடியும். இதற்கு மேலாக, பொருள் வெளிப்பாடு, இலக்கியச்சுவையுணர்வு போன்ற பல்வேறு காரணங்களுக்காக உவமை என்ற இலக்கிய உத்தியை படைப்பாளன் கையாள்கிறான். ஆக உவமை என்பது இலக்கிய உத்தியே என்பதில் யாருக்கும் கருத்து மாறுபாடு இல்லை. அதே நேரத்தில் பக்திப் பாடல்களை நாம் இலக்கிய சிந்தனைக்குள் கொண்டு வரமுடியுமா? பக்திப் பாடல்களில் கையாளப் பட்டிருக்கின்ற உவமைகள் இலக்கியப் படைப்புகளில் கையாளப்பட்டிருக்கின்ற உவமைகள் போன்றதுதான் என்று சிந்திக்கின்றபோது நம் சிந்தனையிலிருந்து வேறுபட்டு நிற்பதே பக்தி பாடல்களில் கையாளப்பட்ட உவமைகள் ஆகும்.

## உவமை கையாளப்படும் நோக்கம்

எல்லோருக்கும் இயல்பாக அறிமுகமான ஒரு பொருளைக் கொண்டு அதனின் ஒப்புடைய பிறிதொன்றைக் கூறி விளக்குவது உவமை ஆகும். (From known to unknown) அதாவது படைப்பாளன் ஏற்கனவே கண்டு வைத்த பொருளைப் புதிதாகக் காணும் பொருளோடு பொருத்தி வைத்த அப்பொருளின் உயர்வு தாழ்வுகளை அளந்து அறிவிக்கிறான் எனக் குறிப்பிடலாம். இவ்வுவமை என்பது எடுத்துக்கொண்ட பொருள். /அதனை ஒத்த பொருள்./ இரண்டிற்கும் இடையே உள்ள பொதுத்தன்மை இவ்விரண்டையும் இணைப்பதற்குப் பயன்படும் சொல் என்னும் உவம உருபு என நான்கு கூறுகளைக் கொண்டது என இலக்கியத்தில் உவமை பயன்படுகின்ற நோக்கத்தை

குறிப்பிட்டாலும், இலக்கியப் படைப்பாளி தன் படைப்புகளில் உவமை கூற விரும்புவதற்கு அடிப்படைக் காரணம் தான் கண்ட பொருளின் சிறப்பைப் படைப்பில் வெளிப்படுத்த வேண்டும் என்ற நோக்கமே "கவிஞன் தான் கண்ட பொருளின் சிறப்பும் அதனால் பெறும் நன்மையும் அதன்மீது கொண்ட ஈடுபாடும் அதன் ஆற்றலும் அக்கவிஞனை உவமை கூற உந்துகின்றன" என்று இரா. சீனிவாசன் கூறுகிறார். இக்கருத்துக்களிலிருந்து உவமை என்ற இலக்கிய உத்தியை படைப்பாளன் கையாள்வதற்குரிய பொருள் விளங்குகிறது.

இதற்கு மேலாக தொல்காப்பியர் உவமை குறித்து வரையறை செய்கிறார். இலக்கியத்தில் உவமைகள் எவ்வாறு கையாளப்பட வேண்டும் என்பதனை ஒரு நூற்பாவில் விளக்கிச் சொல்கிறார். "உயர்ந்ததன் மேற்றே உள்ளுங்காலை", என்னும் நூற்பாவின் மூலம் பொருளைவிட உவமை சிறப்பாக அமைய வேண்டும் என்பதனை வலியுறுத்துகிறார். எனவே, பொருளின் சிறப்பைக் கூறவே உவமை கையாளப்படுவதால், அதன் உயர்வைக் காட்ட அதனினும் உயர்ந்த பொருளைச் சுட்டவேண்டும் எனக் கருதப்பட்டது. அதாவது உவமை உவமேயத்தை விட உயர்ந்ததாக இருக்க வேண்டும் என்று எதிர்பார்க்கப்பட்டது. தமிழ் இலக்கியத்தில் சிற்றிலக்கியக் காலகட்டம் வரையில் உவமைகள் இவ்வகைக் கோட்பாட்டுடனே படைக்கப் பட்டிருக்கின்றன. இது "கலை கலைக்காகவே" என்ற கோட்பாட்டின் வெளிப்பாடாகும்.

மேலே கூறப்பட்ட கருத்திலிருந்து உவமை என்ற இலக்கிய உத்தி இலக்கியப் படைப்பை செம்மை செய்வதற்கும், பொருள் வெளிப்பாட்டிற்கும் இலக்கியச் சுவை உணர்விற்கும் பயன்படுத்தப்படுகின்றன என அறிகிறோம்.

**பக்திப்பாடல்களில் உவமைகள்**

சங்க இலக்கியத்திலிருந்து தொடங்கி நீதி இலக்கியங்கள் வரை புலவர்கள் கருத்துக்களையும் மனிதவாழ்க்கை நிலையையும் வெளிப்படுத்த வேண்டும் என்ற நோக்கம் கொண்டிருந்தாலும் இலக்கியக் கொள்கையை மறந்து

விடவில்லை. ஆனால், நாயன்மார்களும், ஆழ்வார்களும் இறைவனைக் கண்டு பரவசப்பட்டு அவனுக்குப் பாமாலை சாத்துகின்றபோது இலக்கியக் கொள்கைகளை மனதில் கொண்டு பாடல் பாடினார்களா? அப்படியென்றால் பக்திப்பாடல்கள் ஒருவகை இலக்கியம்தானா? என்ற வினாக்கள் எழுவது இயற்கையே.

ஆழ்வார்களும், நாயன்மார்களும் இறைவன் எழுந்திருக்கின்ற ஆலயங்களுக்குச் சென்று இறைவனை தரிசித்துவிட்டு, அதே இடத்தில் இறைவனைப் புகழ்ந்து பாடியிருக்கின்றனர். களப்பிரர் காலத்தில் ஏற்பட்ட பௌத்த, சமண சமயத்தினர் தாக்குதலால் தாக்குண்ட இந்து சமயத்தைச் சேர்ந்தவர்கள், திருமாலையும் சிவனையும் தரிசிக்க முடியாமலும், இந்து சமயம் அழிக்கப்பட்டு வருவதையும் கண்ட அவர்கள், பல தாக்குதலுக்கு உட்பட்டு பொறுமை காத்தனர். வேதனைப்பட்டனர். இந்த வேதனையும், பொறுமையும் பல்லவர் காலத்தில் உடைத்தெறியப்பட்டது. பல்லவர் காலத்தில் ஏற்பட்ட இந்து சமய பாதுகாப்பு அவர்களை வீறுகொண்டு எழச்செய்தது. அந்தச் செயல்பாட்டின் விளைவே பக்திப்பாடல்கள். அப்பாடல்களைத்தான் பின்னர் வந்த சான்றோர்கள் இலக்கியத்திற்குள் உட்படுத்தினர். தன்னை மறந்து இறைவன் மீது கொண்டிருக்கும் பக்தியை இறைவனுக்குச் சாத்துவதற்காக பாடல்களாக பாடினர். மக்களுக்காக இல்லாமல் இறைவனுக்காக பாடியமையால் இலக்கியக் கொள்கையில் அவர்கள் கருத்தைச் செலுத்தவில்லை தாங்கள் பார்த்த, வாழ்க்கையின் எதார்த்தத்தைப் பாடல்களில் வெளிப்படுத்தினர். ஆகையால்தான் அப்பாடல்களில் கையாளப்பட்ட உவமைகள் தொல்காப்பியர் கூறிய மரபிற்கு எதிராக அமைந்திருக்கக் காணலாம்.

### குலசேகர ஆழ்வார் பாடல்களில் உவமை

கட்டுரையின் சுருக்கம் கருதி ஆழ்வார்களில குலசேகர ஆழ்வார் பாடல்களை எடுத்துக்கொண்டு, அப்பாடல்களில் ஒரு சில உவமைகளை மட்டும் எடுத்துக்கொண்டு திறனாய்வு

செய்யப்படுகிறது. குலசேகர ஆழ்வார் திருமால் எழுந்தருளியிருக்கிற தலங்களுக்குச் சென்று இறைவனை தரிசித்து அந்தப் பரவசத்தோடு இறைவனுக்கு பாமாலை சாத்தியபோது, தம் பாடல்களில் கையாண்ட உவமைகள் வாழ்க்கையின் எதார்த்த நிகழ்வுகளாக அமையக் காண்கிறோம்.

"உயர்ந்ததன் மேற்றே உள்ளுங்காலை" என்ற தொல்காப்பியரின் நூற்பாவிற்கு ஏற்ப, உவமையாக எடுத்தாளப்படுவது உவமானத்தைவிட சிறப்பாக அமைய வேண்டும் என்ற கருத்திற்கு மாறுபாடாக இவ்வாழ்வார் பாடல்களில் உவமை கையாளப்பட்டிருப்பதைக் காணமுடிகிறது. எதார்த்த வாழ்க்கையை வாழ்க்கையோடு ஒட்டிய பண்பாட்டுக் கலாச்சாரத்தை உவமையின் வாயிலாக வெளிப்படுத்தியிருக்கிறார். வித்துவக்கோடு என்ற தலத்தில் எழுந்தருளியிருக்கின்ற திருமாலைப் பற்றிப் பாடும்பொழுது

*"தரு துயரம் தடாயே லுன் சரணல்லால் சரணில்லை*
*விரைகுழுவும் மலர்பொழில் சூழ் வித்துவக் கோட்டம்மானே*
*அரிசினத்தா லீன்றதாய் அகற்றிடினும், மற்றவள் தன்*
*அருள் நினைந்தே யழும் குழவி அதுவே போன்றிருந்தேனே"*

எனப் பாடுகிறார். இப்பாடலில் ஒரு தாய் தன் குழந்தையை அடித்து ஒதுக்கினாலும் அக்குழந்தை வேறு போக்கிடம் இன்றித் தன்தாயின் கால்களைப் பற்றிக் கொண்டே அழும். அதுபோல இறைவா எனக்கு நீ என்ன துன்பம் கொடுத்தாலும் உன்பாத மலர்களையே பற்றிக்கொள்வேன் என்கிறார். இப்பாடலில் ஆழ்வார் தன் பக்தியை வெளிப்படுத்திய, விதத்தில், வாழ்க்கையின் எதார்த்த நிகழ்வை மிக நுட்பமாக வெளிப்படுத்தியிருக்கிறார். சிறு குழந்தையின் செயல்பாடுகளை மிக நுட்பமாக கவனித்து தன் பாடல்களில் கையாண்டுள்ளதை பார்க்கின்றபோது குலசேகர ஆழ்வார் பொருள் வெளிப்பாட்டிற்கு அழகாக உவமையைக் கையாண்டிருக்கிறார் என்ற எண்ணம் தோன்றவில்லை. மாறாக ஆழ்வாரின் பக்தித் திறம் மட்டுமே வெளிப்பட்டு நிற்கிறது. அவ்வாறே

*"கண்டா ரிகழ்வனவே காதலன்றான் செய்திடினும்
கொண்டானை யல்லா லறியாக் குலமகள் போல்
விண்டோய் மதிள்புடை சூழ் வித்துவக் கோட்டம்மா, நீ
கொண்டாளா யாகிலுமுன் குரைகழலே கூறுவனே"*

எனப் பாடுகிறார். கண்டவர்கள் இகழும்படியாக மனைவியை ஒரு கணவன் கொடுமைப்படுத்தி அடித்து துன்புறுத்தினாலும், கற்புடைய மனைவி அவனை வெறுத்து ஒதுக்கமாட்டாள். அவனே தன் உயிரென அவன் கால்களையே காத்துக் கிடப்பாள். அதுபோல எனக்குப் பல துன்பங்களை கொடுத்தாலும் உன்னை வெறுத்து ஒதுக்காது உன் பாத மலர்களையே பற்றிக் கொள்வேன் என்கிறார். இப்பாடலில் குடும்ப வாழ்க்கையின் எதார்த்தம் விளக்கப்பட்டிருந்தாலும் நம் பண்பாட்டின் சிறப்பு அழகாக வெளிப்பட்டு நிற்கிறது. காலங்காலமாக நம் குடும்ப அமைப்பு சிதையாமல் பாதுகாக்கப்படுவதற்கு பெண்கள் அடிப்படைக் காரணமாக அமைகின்றனர். இன்று வரையும் பெண்கள் "கல்லானாலும் கணவன் புல்லானாலும் புருசன்" என்ற நாட்டுப்புற வழக்கிலிருந்து மாறுபடாமல் வாழ்க்கை வாழ்ந்து கொண்டிருப்பதை வெளி படுத்திய ஆழ்வார். இப்பாடலில் குடும்ப வாழ்க்கையை எடுத்துக்காட்டி தம் பக்தித் திறத்தை வெளிப்படுத்தியிருக்கிறார். இப்பாடலைப் படிக்கின்ற நாம் அவர் கையாண்ட உவமையின் எதார்த்தத்தை விட அவரது பக்தியே மேலோங்கி நிற்கிறது. இவ்வாறு குலசேகர ஆழ்வார் பாடல்களில் இலக்கியக் கொள்கையை விட வாழ்க்கையின் எதார்த்தங்களே விஞ்சி நிற்கின்றன.

*"வாளா லறுத்துச் சுடினும் மருத்துவன் பால்
மாளாத காதல் நோ யாளன் போல், மாயத்தால்
மீளாத் துயர்தரினும் வித்துவக் கோட்டம்மா, நீ
ஆளா உன தருளே பார்ப்பனடியேனே"*

இப்பாடலில் மருத்துவன் ஒருவன்நேயாளியின் உடலை கத்தி கொண்டு அறுத்தும் சுட்டும் மருத்துவம் பார்க்கும்போது தன் உடலை கத்தியால் அறுத்துவிட்டான். சுடுகோலால் சுட்டுவிட்டான் என்று மருத்துவன் மீது நோயாளி கோபம் கொள்வதில்லை. மாறாக தன் உயிரைக் காத்தவன் என

மருத்துவன் மீது அன்பு கொள்கிறான். அதுபோல எனக்கு எத்தகைய துன்பம் கொடுத்தாலும் உன் மீது கொண்டிருக்கின்ற அன்பு குறைபடாது என்று திருமாலை நோக்கிப் பாடுகிறார். இப்பாடலில் மருத்துவத்தில் நடைபெறுகின்ற செயல்பாடுகளை பாடலில் விளக்கி தம் பக்தியை வெளிப்படுத்தியிருக்கிறார். இப்பாடல்களில் வருவது போன்று ஆழ்வார் தம் பாடல்களில் வாழ்க்கையின் எதார்த்த நிகழ்வுகளையே விளக்கிக் காட்டுகிறார். குலசேகர ஆழ்வார் மட்டுமின்றி ஏனைய ஆழ்வார்களும் கற்பனை நயத்திற்காக உவமையை மேற்கொள்ளாது எதார்த்த செயல்பாடுகளை விளக்குவதற்காக மட்டுமே கையாண்டிருக்கின்றனர்.

உவமை என்ற இலக்கிய உத்தி இலக்கியத்தின் உள்ளடக்கச் சிறப்பிற்கும், பொருள் வெளிப்பாட்டிற்கும் கலை உணர்விற்கும் இலக்கியத்தில் கையாளப் பட்டிருக்கின்றன. ஆனால், ஆழ்வார்கள் இறைவனுக்காக இறைவனைப் போற்றிப் பாடிய பக்திப் பாடல்களில் உவமையை உத்தியாகக் கையாளவில்லை. வாழ்க்கையின் எதார்த்தங்களை வெளிப்படுத்தித் தம் பக்தித் திறத்தினை வெளிப்படுத்தியிருக்கிறார்கள் என்பதை உணரமுடிகிறது.

அடிக்குறிப்புகள்

1. இரா. சீனிவாசன், சங்க இலக்கியத்தின் உவமைகள் ப. 233
2. இளம்பூரணம், (உ.ஆ.), தொல்பொருள், ப. 397
3. குலசேகர ஆழ்வார், திவ்யப் பிரபந்தம், ப. 435
4. மு.நூ.ப.435

அன்பு அச்சகம், மதுரை-1. ✆ 341116